# கோயம்புத்தூர் மாநகராட்சி

**அனுப்புநர்**

**திரு செ.ம.வேலுசாமி, B.A.,D.Com., B.L.,**
**வணக்கத்திற்குரிய மேயர்,**
கோயம்புத்தூர் மாநகராட்சி,

**பெறுநர்**

மதிப்பிற்குரிய துணை மேயர்,
நிலைக்குழு தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
வார்டுக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(சிங்காநல்லூர், கோவை தெற்கு,
கோவை வடக்கு, தொண்டாமுத்தூர்
கவுண்டம்பாளையம், கிணத்துக்கடவு
சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை , மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

**ந.க.எண் : 5079 / 2013 / எம்சி. 8 நாள் : 14 .06.2013**

**அய்யா /அம்மா,**

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி - மாமன்ற சாதாரணக் கூட்டம் 17.06.2013 காலை 10.00 மணிக்கு நடைபெறவிருந்தது – தவிர்க்க இயலாத நிர்வாக காரணங்களால் 18.06.2013 செவ்வாய்கிழமை அன்று காலை 10.30 மணிக்கு நடைபெறுதல் -அறிவிப்பது -தொடர்பாக.

-----------

17.06.2013 அன்று காலை 10.00 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெறவிருந்த கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற சாதாரணக் கூட்டம், தவிர்க்க இயலாத நிர்வாக காரணங்களால் **18.06.2013 செவ்வாய்கிழமை காலை 10.30 மணிக்கு** நடைபெறும் என இதன்மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. அதுசமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத் தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**(ஒப்பம்) செ.ம. வேலுசாமி**
**மேயர்**
கோயம்புத்தூர் மாநகராட்சி

**/ உண்மை நகல் /**

**மாமன்ற செயலாளர்**

**இணைப்பு : 1**

**நகல் :**

ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## கோயம்புத்தூர் மாநகராட்சி

**அனுப்புநர்**

**திரு செ.ம.வேலுசாமி, B.A.,D.Com., B.L.,**
**வணக்கத்திற்குரிய மேயர்,**
கோயம்புத்தூர் மாநகராட்சி,

**பெறுநர்**

மதிப்பிற்குரிய துணை மேயர்,
நிலைக்குழு தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
வார்டுக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(சிங்காநல்லூர், கோவை தெற்கு,
கோவை வடக்கு, தொண்டாமுத்தூர்
கவுண்டம்பாளையம், கிணத்துக்கடவு
சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை , மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

**ந.க.எண் : 5079 / 2013 / எம்சி. 8 நாள் : 10 .06.2013**

**அய்யா /அம்மா,**

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி - மாமன்ற சாதாரணக் கூட்டம் நடைபெறுதல் - நிகழ்ச்சி நிரல் அனுப்புதல் - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற சாதாரணக் கூட்டம் வருகின்ற **திங்கள் கிழமை 17.06.2013 அன்று காலை 10.00 மணிக்கு** வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத் தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**(ஒப்பம்) செ.ம. வேலுசாமி**
**மேயர்**
கோயம்புத்தூர் மாநகராட்சி

**/ உண்மை நகல் /**

**மாமன்ற செயலாளர்**

**இணைப்பு : 1**

**நகல் :**

ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

# மாமன்ற சாதாரணக் கூட்டம் - ஜுன் 2013

## நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| | **பொருளடக்கம்** |
| | அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி |
| **வ.எண்** | **இ). தீர்மானத்திற்குரிய பொருள்கள்** |
| 1 | பொது சுகாதாரப் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சி -குடும்ப நல அறுவைச் சிகிச்சை மையங்கள் - வாடகை அடிப்படையில் பணிபுரியும் மயக்கவியல் மருத்துவா்களுக்கு ஒரு அறுவை சிகிச்சைக்கு- நபர் ஒன்றிற்கு தலா ரூ.500/- (ஐந்நூறு மட்டும்) வழங்கப்பட்டது ரூ.1000/- ஆக (ஆயிரம் மட்டும்) உயர்த்தி வழங்குதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 2 | பொது சுகாதாரப் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து மண்டலங்களிலும் சேகரமாகும் குப்பைகளை தனியார் டிப்பர் லாரிகள் - டிப்பர் டிராக்டர்கள் மூலம் அகற்றவும் - அத்தியாவசிய பணிகள் மேற்கொள்ளவும் ஒப்பந்தப்புள்ளி கோரி புதிய ஒப்பந்ததாரரை நியமித்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 3 | குடிநீர் வழங்கல் பிரிவு - தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் (TNUDF) கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட கவுண்டம்பாளையம், குறிச்சி மற்றும் குனியமுத்தூர் ஆகிய நகராட்சிகளில், குடிநீர் பராமரிப்புக்கென பெறப்பட்ட கடன் தொகை – மறுகடனாக மாற்றம் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 4 | பொறியியல் பிரிவு - மாநகராட்சி பகுதியில் பாதாள சாக்கடை பணிகள் முடிவுபெற பகுதிகளில் உள்ள சாலைகளை TURIF திட்டத்தின் கீழ் புதுப்பிக்க 16.61 கோடி மதிப்பீடுகளுக்கு நிர்வாக அனுமதி சிப்பங்களாக பிரித்து ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகளை மேற்கொள்ள அனுமதி வேண்டுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 5 | கல்வி பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சி - மாநகராட்சி இர.ச.புரம் காதுகேளாதோர் பள்ளியில் மாணவ,மாணவிகளுக்கு கல்வி கற்க - டேப்லெட் பெற்று வழங்குவது - டேப்லெட்களின் தரம் பற்றி பரிந்துரை செய்ய நிபுணர் குழு அமைத்தல் - தொகை ரூ.10.00 இலட்சம் செலவினத்தை மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளுதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. |
| 6 | கல்வி பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சி -மாநகராட்சி பள்ளிகளில் 8 முதல் 12-ம் வகுப்பு வரை பயிலும் மாணவ,மாணவிகளுக்கு பன்முகப்பயிற்சி வழங்குதல் - ஆலோசனைகள் வழங்க நிபுணர் குழு அமைத்தல் - தொகை ரூ.10.00 இலட்சம் செலவினத்தை மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளுதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. |
| 7 | கல்வி பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சி – மாநகராட்சி பள்ளிகளில் 1-ம் வகுப்பு முதல் 5-ம் வகுப்பு வரை பயிலும் மாணவ,மாணவியர்களுக்கு எவ்விதக் கட்டணமுமின்றி (Free of Cost) பயிற்சி வழங்க அனுமதி வழங்குமாறு கோரியுள்ளதால் மேற்படி பயிற்சியினை அறிவுத்திருக்கோயில் ஆன்மீக கல்வி மையம் வழங்கிட அனுமதி அளித்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. |
| 8 | கல்வி பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சி -மாநகராட்சி பள்ளிகளில் 10-ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு மாணவ,மாணவியர்களுக்கு தினசரி மாலையில் சிறப்பு வகுப்புகள் நடைபெற்று - தினசரி மாலை சிறப்பு வகுப்புகள் துவங்குவதற்கு முன்பு சிற்றுண்டி வழங்க நடவடிக்கை எடுக்க- ஆலோசனைகள் வழங்க நிபுணர் குழு அமைத்தல் - தொகை ரூ.100.00 இலட்சம் செலவினத்தை மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளுதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. |
| 9 | மத்திய மண்டலம் - கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட மாநகராட்சி வணிக வளாக கடைகள் -ஒதுக்கீடு செய்யப்பட்டு மூன்றாண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு 15 சதவீதம் வாடகை உயர்வு செய்யவும் மற்றும் ஒன்பது ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசின் ஆணைப்படி வாடகையை உயர்வு செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டுதல் – தொடர்பாக |

| | |
|---|---|
| **10** | பொது சுகாதாரப் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சி – பொதுசுகாதாரப் பிரிவு – 10 இடங்களில் அம்மா உணவகங்கள் திறப்பதற்கு அனுமதி அளித்தல்– அரசாணையைப் பதிவு செய்தல் – தொடர்பாக |
| **11** | பணியமைப்பு – திருமதி. ஆர். ருக்மணி, நகர சுகாதார செவிலியர், இராமநாதபுரம் நகர் நல மையம் – திருப்பூர் மாநகராட்சிக்கு மாறுதல் கோருவது – மாமன்ற அனுமதி வேண்டுதல் – தொடர்பாக. |
| **12** | பணியமைப்பு - கோயம்புத்தூர் மாநகராட்சி வளர்ச்சிப் பணிகள் தொய்வின்றி நடைபெறுவதற்கு ஒப்பந்த அடிப்படையில் தொழில்நுட்ப உதவியாளர்களை தற்காலிகமாக நியமனம் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **13** | நகரமைப்புப் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சியில் நகர அபிவிருத்தி தொலைநோக்கு திட்டத்தில் சேவைகளின் தரத்தை மேம்படுத்துதல் - திட்டங்களை நிறைவேற்றுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **14** | பொறியியல் பிரிவு - சட்டமன்ற வரவு செலவு திட்ட கூட்டத் தொடரில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு – நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்திற்கு புதிய கட்டிடம் கட்டுதல் – அந்தந்த மாநகராட்சிகள்/நகராட்சிகள் உறுப்பினராகும் பொருட்டு வழங்க வேண்டிய நிதி பங்களிப்பினை மாநில நிதிக்குழு பரிந்துரை மானியத்திலிருந்து மூன்று தவணைகளில் பிடித்தம் செய்து கொள்வதற்கு இசைவு தெரிவிக்க மாமன்ற அனுமதி கோருதல் – தொடர்பு. |
| **15** | நகரமைப்புப் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டப்படும் கட்டிடங்களுக்கு உரிமம் வழங்குதல் - உரிமக்கட்டணத்தை திருத்தி அமைத்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **16** | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண் 38 – வ.உ.சி. பிரதான சாலை அமைத்தல் பணி – மதிப்பீடு ரூ. 74.80 இலட்சம் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **17** | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண் 38 – செங்காளியப்பன் நகர் பிரதான மற்றும் குறுக்கு சாலைகளை அகலப்படுத்துதல் பணி - மதிப்பீடு ரூ. 57.80 இலட்சம் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **18** | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண் 38 – ரயில்வே தரைப்பாலத்தின்கீழ் கான்கிரீட் சாலை அமைத்தல் பணி - மதிப்பீடு ரூ. 73.20 இலட்சம் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **19** | பொறியியல் பிரிவு - தனியார் டேங்கர் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் - மதிப்பீடு ரூ. 75 இலட்சம் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **20** | பொறியியல் பிரிவு - புதியதாக இணைக்கப்பட்ட கவுண்டம்பாளையம், வடவள்ளி பகுதிகளில் குடிநீர் பகிர்மான குழாய்கள் அமைத்தல் மற்றும் பில்லூர் II வது திட்டத்தில் இருந்து குழாய் அமைத்து குடிநீர் விநியோகம் செய்தல் - உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ. 1687 இலட்சம் - அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு பிரேரணை அனுப்புதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |

**நன்றியுரை**

**அ)** **திருக்குறள்**

விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உள்நின்று உடற்றும் பசி.

**(குறள் - 13)**

**விளக்கம்**

மழை பொய்த்தால், இவ்வுலகு விரிந்த கடல் நீரால் சூழப்பட்டிருந்தாலும், நிலத்தின் விளைபொருள் குன்றி, பசி நின்று துன்புறுத்தும்.

**திருவள்ளுவர்**

---

**ஆ)** **தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

**சிறப்புத் தீர்மானம் எண் 1**

இந்தியாவிலேயே முதல் முறையாக தமிழக மாநகராட்சி பகுதிகளில் அம்மா உணவகம் என்ற பசித்தவர்களுடைய வயிற்றுக்கு சோறிடும் மகத்தான திட்டத்தை உருவாக்கி தமிழ்நாட்டின் 10 மாநகராட்சியில் செயல்படுத்த உத்திரவிட்டு சென்னை மாநகராட்சிக்கு அடுத்தபடியாக கோயம்புத்தூர் மாநகராட்சியில் 10 எண்ணிக்கையிலான அம்மா உணவகங்களை கடந்த 02.06.2013 அன்று காணொளி காட்சி மூலம் திருக்கரங்களால் திறந்து வைத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் கோவை மாநகராட்சி மக்கள் சார்பாக நன்றிகளை காணிக்கையாக்குகிறோம் என்ற சிறப்பு தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் கொண்டுவரப்பட்டது.

**சிறப்புத் தீர்மானம் எண் 1 நாள் 18.06.2013**

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

**சிறப்புத் தீர்மானம் எண் 2**

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் உள்ள தேசிய, மாநில நெடுஞ்சாலைகளுக்குச் சொந்தமான சாலைகளில் உள்ள மையத் தடுப்புச்சுவர்களில் விளம்பர பலகைகள் அகற்றப்பட்டுள்ள காரணத்தினால், அவைகளை பராமரித்து வந்த விளம்பர நிறுவனங்கள் அப்பணியை நிறுத்திவிட்டதால் சாலையின் மைய தடுப்பில் உள்ள செடிகள் மிகவும் வறண்டு காணப்படுகிறது.

இம்மாநகரை பசுமைமிகு நகரமாக மாற்றுவதன் ஒருபடியாக, மேற்படி சாலைகளில் உள்ள மைய தடுப்புச்சுவர்களில் பொருத்தமான செடிகளை நட்டு பராமரிக்க மாநகராட்சி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற சிறப்பு தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் கொண்டுவரப்பட்டது.

**சிறப்புத் தீர்மானம் எண் 2 நாள் 18.06.2013**

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

**சிறப்புத் தீர்மானம் எண் 3**

தமிழ்நாட்டிலேயே முன்னோடி முயற்சியாக அதிகாரிகள், பொதுமக்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் குறிப்பாக சிறுதுளி அமைப்பு, ராக் அமைப்பு, விஜயலட்சுமி அறக்கட்டளை ஆகியவைகள் இணைந்து உக்கடம் பெரிய குளத்தை தூர்வாரி, ஆழப்படுத்தி மழைநீரை சேமிக்க எடுத்துக்கொண்ட சீரிய முயற்சியையும், செய்துமுடித்த சிறப்பான பணியையும் பாராட்டுவதுடன், இம்மாமன்றம் அவர்கள் ஒவ்வொருவருக்கும் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது. மேலும் இதுபோன்ற பணிகளுக்கு அந்தந்த பகுதியைச் சார்ந்த மாமன்ற உறுப்பினர்கள் தங்களது ஒத்துழைப்பையும், பங்களிப்பையும் நல்கிடவேண்டும் என்ற சிறப்பு தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் கொண்டுவரப்பட்டது.

**சிறப்புத் தீர்மானம் எண் 3 நாள் 18.06.2013**

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

**சிறப்புத் தீர்மானம் எண் 4**

கோயம்புத்தூர் மாநகராட்சியினுடைய மக்கள் தொகையின் விகிதாச்சார அடிப்படையில், துப்புரவுப் பணியாளர்கள் நியமிக்கப்படாததால், துப்புரவுப் பணியில் மிகுந்த சுணக்கம் இருப்பதை கருத்தில் கொண்டு, துப்புரவுப் பணியாளர்களின் பற்றாக்குறை 424 என்று கணக்கிடப்பட்டுள்ள சூழ்நிலையில், அவ்வெண்ணிக்கையிலான துப்புரவுப் பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் மாநகராட்சி துப்புரவுப் பணிகளுக்கு நியமிக்க வேண்டும் என்ற சிறப்புத் தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் அனுமதியுடன் வடக்கு மண்டல தலைவர் திரு ப. ராஜ்குமார் அவர்களால் முன்மொழியப்பட்டு, வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுத் தலைவர் திரு ஆர். பிரபாகரன் அவர்களால் வழிமொழியப்பட்டது.

**சிறப்புத் தீர்மானம் எண் 4 நாள் 18.06.2013**

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

**சிறப்புத் தீர்மானம் எண் 5**

கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குள் கட்டப்படும் அடுக்குமாடி குடியிருப்புகளில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் ஏற்படுத்தப்படவேண்டும். அக்குடியிருப்புகளுக்குரிய காலி இடத்தில் மரக்கன்றுகள் நட்டு வளர்ப்பது கட்டாயமாக்கப்படவேண்டும் என்ற சிறப்புத் தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் அனுமதியுடன் 44வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு ரா. வெண்தாமரைபாலு அவர்களால் முன்மொழியப்பட்டு, 45 வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. மா. குணசேகரன் அவர்களால் வழிமொழியப்பட்டது.

**சிறப்புத் தீர்மானம் எண் 5 நாள் 18.06.2013**

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

**பொருள் எண் -1**

பொருள் :- பொது சுகாதாரம் - கோயம்புத்தூர் மாநகராட்சி -குடும்ப நல அறுவைச் சிகிச்சை மையங்கள் - வாடகை அடிப்படையில் பணிபுரியும் மயக்கவியல் மருத்துவர்களுக்கு ஒரு அறுவை சிகிச்சைக்கு- நபர் ஒன்றிற்கு தலா ரூ.500/- (ஐந்நூறு மட்டும்) வழங்கப்பட்டது ரூ.1000/- ஆக (ஆயிரம் மட்டும்) உயர்த்தி வழங்குவது - தொடர்பாக.

******

கோயம்புத்தூர் மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள 6 அறுவைச்சிகிச்சை மையங்களில் நடைபெற்று வரும் குடும்ப நல அறுவைச் சிகிச்சைக்கு வாடகை அடிப்படையில் மயக்க சிகிச்சை வழங்க வரும் மருத்துவ அலுவலர்களுக்கு தலா ஒரு அறுவை சிகிச்சைக்கு ரூ.500/- (ஐந்நூறு மட்டும்) ஐ வழங்க, மாமன்ற தீர்மான எண். 4, நாள். 13.06.2011-ன் படி அனுமதி பெறப்பட்டு மாநகராட்சி நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் நகர் நல மைய மருத்துவ அலுவலர்கள், வாடகை அடிப்படையில் மயக்கவியல் பணிமேற்கொள்ள வரும் மருத்துவருக்கு வழங்கப்பட்டு வரும் ரூ.500/- (ஐந்நூறு ) ஐ நபர் ஒன்றுக்கு ரூ.1000/- ஆக (ரூ.ஆயிரம்) வழங்க கேட்டுள்ளனர்.

இது தொடர்பாக வாடகை அடிப்படையில் மயக்கவியல் பணிமேற்கொள்ளும் மயக்கவியல் மருத்துவக் கூட்டமைப்பும் மயக்கவியல் பணி மேற்கொள்ளப்படும் போது வழங்கப்படும் தொகையான ரூ.500/- ஐ ரூ.1000/-மாக உயர்த்தி வழங்க கேட்டுள்ளனர்.

எனவே, நகர் நல மைய பெண் மருத்துவ அலுவலர்கள் கோரியுள்ளபடி, ஒரு தாய்மார்க்கு குடும்ப நல அறுவை சிகிச்சை செய்ய வாடகை அடிப்படையில் பணிபுரியும் மயக்கவியல் மருத்துவருக்கு தற்சமயம் வழங்கப்பட்டு வரும் அறுவை சிகிச்சை ஒன்றிற்கு ரூ.500/- (ஐந்நூறு) வழங்கப்படுவதை ரூ.1000/- மாக உயர்த்தி வழங்க சுகாதார நிலைக்குழு தீர்மான எண்.21 நாள்.09.05.2013ன்படி அனுமதித்துள்ளதை மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- அனுமதிக்கலாம் எண். 2457/2005/ எம்.இ.3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 57 நாள் 18.06.2013</u>**

சுகாதாரக்குழு தீர்மானம் எண் 21 நாள் 09.05.2013-ன் தீர்மானத்திற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் -2**

பொருள்:- கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்டஅனைத்து மண்டலங்களிலும் சேகரமாகும் குப்பைகளை தனியார் டிப்பர் லாரிகள் - டிப்பர் டிராக்டர்கள் மூலம் அகற்றவும் - அத்தியாவசிய பணிகள் மேற்கொள்ளவும் ஓப்பந்தப்புள்ளி கோரி புதிய ஒப்பந்ததாரரை நியமித்தல் - தொடர்பாக

----------------

கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து மண்டலங்களிலும் சேகரமாகும் குப்பைகளை தனியார் டிப்பர் லாரிகள் மற்றும் டிப்பர் டிராக்டர்கள் மூலம் அகற்றவும் மற்றும் அத்தியாவசிய பணிகள் மேற்கொள்ளவும் 2013-14-ம் ஆண்டிற்கு புதிதாக மாற்றியமைக்கப்பட்ட கிலோமீட்டர்களின் அடிப்படையில் ஒவ்வொரு மண்டலத்திற்கும் கீழ்கண்ட மதிப்பீட்டின்படி தனித்தனியாக ஒப்பந்தப்புள்ளி கோருவது குறித்து மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | மண்டலம் | வார்டு | லாரிகள் மற்றும் டிராக்டர்களின் எண்ணிக்கை | மாதாந்திர செலவினம் (லட்சம்) | ஆறுமாத கால செலவினம் (லட்சம்) | 20% கூடுதல் செலவினம் (லட்சம்) | உத்தேச மொத்த செலவினம் (லட்சம்) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | மத்திய மண்டலம் | 25,54,72 80,81,83 84 | டிப்பர் லாரி 7 | 4.00 | 24.00 | 4.80 | 28.80 |
| 2 | மத்திய மண்டலம் | 48,53,73 50,71,51, 45,49 | டிப்பர் லாரி 8 | 6.40 | 38.40 | 7.68 | 46.08 |
| 3 | தெற்கு மண்டலம் | 76,77,787990 | டிப்பர் லாரி 5 | 5.30 | 31.80 | 6.36 | 38.16 |
| | தெற்கு மண்டலம் | 93,94,95,98,99, 100 | **டிப்பர் டிராக்டர் 6** | 3.65 | 21.90 | 4.38 | 26.28 |
| 4 | மேற்கு மண்டலம் | 5,6,7,8, 11,14,15,16 | டிப்பர் லாரி 8 | 7.00 | 42.00 | 8.40 | 50.40 |
| 5 | மேற்கு மண்டலம் | 17,20,21,22,23,24 | டிப்பர் லாரி 8 | 7.90 | 47.40 | 9.48 | 56.88 |
| 6 | கிழக்கு மண்டலம் | 37,59,61,63,58,57,67,65, 69,64,35,36,34 | டிப்பர் லாரி 13 | 8.30 | 49.80 | 9.96 | 59.76 |
| 7 | வடக்கு மண்டலம் | 2,4,40,47,46 41,44,55 | டிப்பர் லாரி 8 | 7.70 | 46.20 | 9.24 | 55.44 |
| 8 | வடக்கு மண்டலம் | 55,43,28,30,38,27,39 | டிப்பர் லாரி 7 | 7.55 | 45.30 | 9.06 | 54.36 |

அலுவலகக் குறிப்பு : - ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்: 3729/2013/எம்.இ.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 58 நாள் 18.06.2013**

லாரிகள் மற்றும் டிராக்டர்களை மாநகராட்சி பணிக்கு பணியாளர்களுடன் சேர்த்து ஒப்பந்தம் செய்துகொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் கோரலாம் என்ற நிபந்தனையுடன் அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் -3**

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் (TNUDF) கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட கவுண்டம்பாளையம், குறிச்சி மற்றும் குனியமுத்தூர் ஆகிய நகராட்சிகளில், குடிநீர் பராமரிப்புக்கென பெறப்பட்ட கடன் தொகை ரூ. 15,07,22,312/- ஆகும்.

மேற்காண் மூன்று நகராட்சிகளில் TNUDF-இல் பெறப்பட்ட கடன் தொகையில் கீழ்க்கண்ட தொகை WSPF-ஆல் குறைந்த வட்டிக்கு வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | TNUDF-லிருந்து பெற்ற கடன் தொகை | திருப்பிச் செலுத்திய அசல் | TNUDF-க்கு இன்னும் செலுத்தப்பட வேண்டிய அசல்நிலுவை | WSPF-ஆல் மறுகடன் வழங்க ஒப்புக் கொள்ளப்பட்ட கடன் தொகை |
|---|---|---|---|---|---|
| | | (ரூ) | (ரூ) | (ரூ) | (ரூ) |
| 1. | குறிச்சி நகராட்சி | 4,82,50,000 | 2,25,031 | 4,80,24,969 | 4,80,24,969 |
| 2. | குனியமுத்தூர் நகராட்சி | 3,86,72,312 | 2,54,504 | 3,84,17,808 | 3,84,17,808 |
| 3. | கவுண்டம்பாளையம் நகராட்சி | 6,38,00,000 | இல்லை | 6,38,00,000 | 5,00,00,000 |
| | மொத்தம் | 15,07,22,312 | 4,79,535 | 15,02,42,777 | 13,64,42,777 |

WSPF-கடன் தொகை காலாண்டுக்கு ஒருமுறை வீதம் மொத்தக்கடன் தொகையை 60 தவணைகளில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டியதாகும். 60 தவணைகளில் முதல் 10 ஆண்டுகளுக்கு 6.40% வட்டி விகிதத்திலும் அடுத்து வரும் 5 ஆண்டுகளுக்கு 8.75% வட்டி விகிதத்திலும் வழங்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே, TNUDF-இல் பெறப்பட்ட கடனுக்கு வட்டி விகிதம் 8.58% முதல் 9.61% வரை உள்ள நிலையில், தற்போது குடிநீர் மற்றும் சுகாதாரக்கூட்டு நிதியத்தால் அளிக்கப்படும் கடனுக்கு (WSPF) வட்டி விகிதம் 6.40% முதல் 8.75% என ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. இவ்விரண்டு வட்டி விகிதங்களையும் ஒப்பிடுகையில், 2.10% முதல் 3.10% வரை ஆண்டு ஒன்றிற்கு வட்டி WSPF-இல் குறைவாக உள்ளது. இதன் மூலம் கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு ஆண்டொண்டிற்கு 29.74 இலட்சம் வட்டித்தொகையைச் சேமிக்க இயலும்.

**குடிநீர் மற்றும் சுகாதாரக்கூட்டு நிதியத்தின் நிபந்தனைகள் (WSPF):**

1. கடன் தொகை ரூ.13,64,42,777/- 60 காலாண்டுகளில் 15 வருடத்திற்குள் திருப்பிச் செலுத்த வேண்டும்.
2. இக்கடனுக்கான வட்டி 6.40% சதவிகிதத்தை முதல் பத்தாண்டுகள் வரை செலுத்தப்பட வேண்டும். அடுத்து வரும் 5 ஆண்டுகளுக்கும், ஒவ்வொரு காலாண்டுக்கும் 8.75% வட்டி விகிதத்தில் செலுத்தப்பட வேண்டும். இவ்வட்டியானது காலாண்டிற்கு ஒருமுறை நிலுவையிலுள்ள கடன் அசல் தொகைக்கு ஏற்ப செலுத்தப்பட வேண்டும் (Diminishing Interest).
3. இது தொடர்பாக வங்கியில் தணிக்கணக்கு (Escrow Account) துவக்கி பராமரிக்கப்பட வேண்டும்.
4. குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் அசல் மற்றும் வட்டித்தொகை செலுத்தப்படாவிடில் அவற்றை கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு மாநில நிதிக்குழு பகிர்மான நிதியிலிருந்து பகிர்ந்தளிக்கப்படும் நிதியில் பிடித்தம் செய்யப்படும்.
5. ஒரு வருடத்திற்கான அசல் மற்றும் வட்டித்தொகை ரூ.1,76,10,213/-ஐ கோயம்புத்தூர் மாநகராட்சி மற்றும் குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் பெயரில் கூட்டுக்கணக்காக (Joint Account) நிரந்தர முதலீடு செய்யப்பட வேண்டும்.
6. இது தொடர்பாக குடிநீர் மற்றும் சுகாதாரக்கூட்டு நிதியம் (WSPF) நிர்ணயிக்கும் வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

எனவே, மேற்குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு, ஆண்டொன்றிற்கு சுமார் 29.74 இலட்சம் வட்டி இழப்பைத் தடுக்கும் பொருட்டு, குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியத்தால் (WSPF) ரூ.13,64,42,777/-ஐ மறுகடனாக மாற்றம் செய்ய ஆணையாளர் மற்றும் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று 04.06.2013ல் அனுப்பப்பட்ட கடிதத்திற்கு பின்னேற்பு வேண்டி மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண்.4456 / 2013 /குவி4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 59 நாள் 18.06.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண்-4

கோயம்புத்தூர் மாநகராட்சியில் JNNURM திட்டத்தின் கீழ் பாதாளசாக்கடை பணிகள் சுமார் 379.90 கிலோமீட்டர் நீளத்திற்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் முதற்கட்டமாக பாதாள சாக்கடை முடிவுற்ற சாலைப் பகுதிகளை புதுப்பிக்க 2011-12ம் ஆண்டில் TURIF திட்டத்தின் கீழ் 47.65 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் ரூ.14.53 கோடி செலவிலும், 2012-13ஆம் ஆண்டில் பாதாள சாக்கடை முடிவடைந்த பகுதிகளில் IUDM திட்டத்தின் கீழ் 146.45 கிலோ மீடடர் நீளமுள்ள சாலைகள் ரூ.51.26 கோடி செலவிலும் சாலைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

மேலும் 2013-14 ஆம் ஆண்டில் 121.80 கிலோ மீட்டர் நீளமுள்ள பாதாள சாக்கடை முடிவுற்ற சாலைப் பகுதிகளை புதுப்பிக்க ரூ.50.80 கோடிக்கு கடனுதவி கோரி விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதி நிறுவன (TNUDF) அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மாநகராட்சியில் தற்சமயம் பாதாள சாக்கடை பணிகள் முடிவுற்ற 64 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைப் பகுதிகளை புதுப்பிக்கரூ.26.00 கோடியினை மானியமாக சிறப்பு சாலைகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு வழங்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையரிடம் அனுமதி கேட்கப்பட்டது. ஆனால் 16.05.2013 அன்று நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளர் அவர்களின் செயல்முறை ஆணையின் படி மேலே குறிப்பிடப்பட்ட ரூ.26.00 கோடி திட்டத்திற்கு பதிலாக 64 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலை பகுதிகளை TURIF திட்டத்தின் கீழ் புதுப்பிக்க ரூ.16.61 கோடிக்கான மாற்று திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் ரூ.15.00 கோடி மானியமாக TURIF திட்டத்தின் கீழ் நிதி உதவி பெற்று பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது. மீதமுள்ள தொகை ரூ.1.61 கோடி மாநகராட்சி நிதியிலிருந்தும் பெற்று பணிகள் மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே, மாநகராட்சிப் பகுதியில் பாதாள சாக்கடை பணிகள் முடிவுற்ற கீழ்கண்ட சாலைகளை புதுப்பிக்க தயாரிக்கப்பட்ட 16.61 கோடி மதிப்பீடுகளுக்கு நிர்வாக அனுமதி வேண்டியும், சிப்பங்களாக பிரித்து ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகளை மேற்கொள்ளவும், மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**மேற்கு மண்டலம்**

| வ. எண் | வார்டு எண் | வேலையின் பெயர் | நீளம் கி.மீ | மதிப்பீடு தொகை ரூ லட்சத்தில் | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | 11 | மணியம் வேலப்பர் வீதி, காளியப்பன் வீதி மற்றும் பெரிய சுப்பண்ணன் வீதிகளுக்கு மறு தார் தளம் அமைத்தல் | 1.476 | 74.70 | |
| 2 | 11 | அம்மாசை வீதிக்கு மறு தார் தளம் அமைத்தல் | 0.950 | 34.43 | |
| 3 | 12 | சின்னம்மாள் வீதிக்கு மறு தார் தளம் அமைத்தல் | 0.850 | 29.75 | |
| 4 | 12 | சபாபதி வீதிக்கு மறு தார் தளம் அமைத்தல் | 1.500 | 52.50 | |
| 5 | 13 | ராமசாமி வீதி மற்றும் பொங்காளி கோனார் வீதிகளுக்கு மறு தார் தளம் அமைத்தல் | 1.800 | 63.00 | |
| 6 | 13 | பாபா வீதி, கங்கா வீதி மற்றும் சாஸ்திரி வீதிகளுக்கு மறு தார் தளம் அமைத்தல் | 1.050 | 36.75 | |
| 7 | 13 | ஆர்.கே நாயுடு மனைப்பிரிவு, சுப்பிரமணியபுரம் வீதி மற்றும் ஜெகஜீவன் ராம் வீதிகளுக்கு மறு தார் தளம் அமைத்தல் | 0.875 | 44.00 | |
| 8 | 13 | நாச்சிமுத்து மனைப்பிரிவு, வி.கே.கே மேனன் சாலை மறறும் விஸ்வேஸ்வர ஐயர் வீதி 1 மற்றும் 3 வீதிகளுக்கு மறு தார் தளம் அமைத்தல் | 1.120 | 52.00 | |
| 9 | 14 | அம்மாசை கோனார் வீதி, தியாகி குமரன் வீதி மற்றும் பகவத் சிங் வீதிகளுக்கு மறு தார் தளம் அமைத்தல் | 0.405 | 23.70 | |
| 10 | 15 | மும்மநாயக்கர் வீதி, பொன்னகர் மற்றும் கருப்பாத்தாள் மனைப்பிரவு வீதிகளுக்கு மறு தார் தளம் அமைத்தல் | 0.698 | 31.00 | |
| 11 | 20 | லட்சுமி நகர் மற்றும் குறுக்கு வீதிகளுக்கு மறு தார் தளம் அமைத்தல் | 0.493 | 35.75 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 12 | 20 | அலமேலு அம்மாள் தோட்டம், பாரதியாா் வீதி மற்றும் பகவத் சிங் வீதிகளுக்கு மறு தாா் தளம் அமைத்தல் | 0.625 | 35.20 | |
| 13 | 21 | கோகுலம் காலனி 4வது வீதி தொடா்ச்சி மற்றும் சாஸ்த்திரி வீதிகளுக்கு மறு தாா் தளம் அமைத்தல் | 0.620 | 34.80 | |
| 14 | 21 | முத்தண்ணன் குளம் கரை ஓரமாக உள்ள சாலைக்கு மறு தாா் தளம் அமைத்தல் | 0.875 | 47.90 | |
| | | **மொத்தம்** | **13.337** | **595.48** | |

## மத்திய மண்டலம்

| வ. எண் | வாா்டு எண் | வேலையின் பெயா் | நீளம் கி.மீ | மதிப்பீடு தொகை ரூ லட்சத்தில் | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | 70 | அம்மன் குளம் வடக்கு பகுதியில் உள்ள சாலைகளுக்கு மறு தாா் தளம் அமைத்தல் | 0.975 | 55.85 | |
| 2 | 70 | கொண்டசாமி மனைப்பிரிவு வடக்கு, தெற்கு பிரதான சாலைகளுக்கு மறு தாா் தளம் அமைத்தல் | 0.405 | 28.20 | |
| 3 | 74 | ஜி.எம் நகா் குறுக்கு சாலையில் மறு தாா் தளம் அமைத்தல் | 2.850 | 70.00 | |
| | | **மொத்தம்** | **4.230** | **154.05** | |

## வடக்கு மண்டலம்

| வ. எண் | வாா்டு எண் | வேலையின் பெயா் | நீளம் கி.மீ | மதிப்பீடு தொகை ரூ லட்சத்தில் | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | 40 | ஸ்ரீராம் நகா் பகுதியில் மறு தாா் தளம் அமைத்தல் | 0.860 | 21.00 | |
| 2 | 41 | வெங்கிடசாமி நகா் பகுதியில் மறு தாா் தளம் அமைத்தல் | 1.111 | 74.80 | |
| 3 | 41 | தங்கம்மாள் நகா், அசோக் நகா் மற்றும் பாலமுருகன் நகா் பகுதியில் மறு தாா் தளம் அமைத்தல் | 1.600 | 75.00 | |
| 4 | 41 | காந்தி மாநகா் நகா் பகுதியில் மறு தாா் தளம் அமைத்தல் | 1.210 | 74.80 | |
| 5 | 41 | அசிச நகா் மற்றும் நேரு நகா் விரிவாக்கம் பகுதியில் மறு தாா் தளம் அமைத்தல் | 1.500 | 60.00 | |
| 6 | 41 | அம்பாள் நகா், கற்பக விநாயகா் நகா் மற்றும் எம்.கே.பி காலனி பகுதியில் மறு தாா் தளம் அமைத்தல் | 1.500 | 75.00 | |
| 7 | 41 | எவ்.சி.ஐ காலனி, கிருஷ்ணா நகா் மற்றும் நந்தவனத் தோட்டம் பகுதியில் மறு தாா் தளம் அமைத்தல் | 0.600 | 25.00 | |
| 8 | 47 | குமரன் நகா் மற்றும் புதியவா் நகா் பகுதியில் மறு தாா் தளம் அமைத்தல் | 1.500 | 55.00 | |
| | | **மொத்தம்** | **9.881** | **460.60** | |

## கிழக்கு மண்டலம்

| வ. எண் | வார்டு எண் | வேலையின் பெயர் | நீளம் கி.மீ | மதிப்பீடு தொகை ரூ லட்சத்தில் | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | 75 | சாரமேடு பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலைக்கு தார் தளம் புதுப்பித்தல் | 1.250 | 75.00 | |
| 2 | 75 | சலாமத் நகர் மற்றும் வள்ளல் நகர் சாலைகளுக்கு தார் தளம் புதுப்பித்தல் | 1.200 | 64.00 | |
| 3 | 66 | ஸ்ரீ லட்சுமி நகர் மற்றும் பால் ஹரிஸ் நகர் சாலைகளுக்கு தார் தளம் புதுப்பித்தல் | 1.125 | 49.00 | |
| 4 | 67 | அண்ணா நகர் மற்றும் ஓம் சக்தி நகர் சாலைகளுக்கு தார் தளம் புதுப்பித்தல் | 1.890 | 47.00 | |
| 5 | 58 | தாமோதரசாமி லே-அவுட், ராமசந்திரன் லே-அவுட், அங்கம்மாள் லே-அவுட் மற்றும் விவேகானந்தர் நகர் ஆகிய பகுதிகளில் தார் தளம் அமைத்தல் | 1.920 | 52.00 | |
| 6 | 58 | சிவா நகர் சாலைகளுக்கு தார் தளம் அமைத்தல் | 1.850 | 45.00 | |
| 7 | 58 | கபிலன் கார்டன் சாலைகளுக்கு தார் தளம் அமைத்தல் | 1.490 | 23.00 | |
| 8 | 64 | நாராயணா அவென்யூ சாலைகளுக்கு தார் தளம் அமைத்தல் | 1.360 | 34.00 | |
| 9 | 64 | தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு (மேற்கு) சாலைகளுக்கு தார் தளம் அமைத்தல் | 1.370 | 28.00 | |
| 10 | 64 | B.R.நகர் சாலைகளுக்கு தார் தளம் அமைத்தல் | 1.580 | 34.00 | |
| | | **மொத்தம்** | **15.035** | **451.00** | |

மேலும் மேற்காண் அட்டவணையில் திட்டத்திற்கான மானிய தொகையை தமிழ்நாடு நகர்புர சாலை மேம்பாட்டு நிறுவனத்திடம் இருந்து பெற்று மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

1. மேற்கண்ட நிதிப்பகிர்வின் அடிப்படையில் திட்டத்திற்கான மானியம் தொகையினை தமிழ்நாடு நகர்புர சாலை மேம்பாட்டு நிறுவனத்திடமிருந்து பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் .
2. மேற்படி பணிகளுக்கு நிர்வாக அனுமதி மற்றும் சிப்பங்களாக பிரித்து ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி திட்டத்திற்கான மாநகராட்சி பங்கு தொகையை மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.10897/ 2013/ எம்டி.3**

**மாநகர மன்ற தீர்மானம் எண் 60 நாள் 18.06.2013**

அலுவலகக் குறிப்பு 1, 2 மற்றும் 3 ஐ அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண்-5

நிர்வாகம் - கல்வி - கோயம்புத்தூர் மாநகராட்சி - மாநகராட்சி இர.ச.புரம் காதுகேளாதோர் பள்ளியில் மாணவ,மாணவிகளுக்கு கல்வி கற்க - டேப்லெட் பெற்று வழங்குவது - டேப்லெட்களின் தரம் பற்றி பரிந்துரை செய்ய நிபுணர் குழு அமைத்தல் - தொகை ரூ.10.00 இலட்சம் செலவிட அனுமதி வேண்டுவது - தொடர்பாக.

-----------------

கோயம்புத்தூர் மாநகராட்சி 2013-2014-ம் ஆண்டிற்கான பயன்பாட்டுக் குறிக்கோளுடன் கூடிய வரவு செலவு திட்ட அறிக்கையில், மாநகராட்சியால் இர.ச.புரம் பகுதியில் நடத்தப்படும் காதுகேளாதோர் பள்ளியில், காதுகேளாத, வாய்பேச முடியாத 36 மாணவர்களும், 6 மாணவியர்களும் பயின்றுவருகின்றனர். இவர்களுக்கு 5 ஆசிரியர்கள் மூலம் கல்வி பயிற்றுவிக்கப்படுகின்றது. இந்தியாவிலேயே முதன்முறையாக இப்பள்ளி மாணவ/மாணவியர் மற்றும் ஆசிரியர்களுக்கு நவீன முறையில் கல்வி கற்பதற்காக மாநகராட்சி மூலம் ‘டேப்லெட்’ வழங்கப்படவுள்ளது. எனவும் இதில் ஆசிரியர்கள் சைகை மொழியில் பாடங்களுக்கான விளக்கம் கொடுப்பதை பதிவு செய்து கொடுக்கப்படும் எனவும், இதன் மூலம் ஆசிரியர்களின் வேலைப்பளு குறைவதுடன் மாணவர்களின் அறிவுத்திறனும் மேம்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநகராட்சி இர.ச.புரம் காதுகேளாதோர் உயர்நிலைப்பள்ளியில் பயிலும் 36 மாணவர்கள் மற்றும் 6 மாணவிகளுக்கு ‘டேப்லெட்’ பெற்று வழங்கவும் ‘டேப்லெட்களின் தரம் (Specification/Configuration) குறித்து பரிந்துரைசெய்தல் மற்றும் இறுதி செய்திட ஆலோசனைகள், பரிந்துரைகள் மற்றும் கருத்துக்கள் வழங்கிட கீழ்க்கண்ட நபர்கள் அடங்கிய நிபுணர்குழு அமைத்திடவும்,

1. ஆணையாளர் அவர்கள்.
2. துணை ஆணையாளர் அவர்கள்.
3. உதவி ஆணையாளர் கணக்குகள்.
4. மாநகர பொறியாளர்.
5. மாநகராட்சி கல்வி அலுவலர்.
6. உதவி திட்ட அலுவலர்.
7. திரு.V.அலெக்சாண்டர், மண்டல ஒருங்கிணைப்பாளர், அமெரிக்கன் இந்தியா .˙.பவுண்டேசன் நிறுவனம்.
8. திரு.D.பாஸ்கரன், மாநில திட்ட மேலாளர், அமெரிக்கன் இந்தியா .˙.பவுண்டேசன் நிறுவனம்.
9. முதல்வர், கோயம்புத்தூர் இன்ஸ்டிட்யூட் ஆப் டெக்னாலஜி, பீளமேடு.
10. துறைத் தலைவர், கல்வி/கணிப்பொறி அறிவியல், ஸ்ரீ அவினாசிலிங்கம் பல்கலைக்கழகம்.
11. துறைத் தலைவர், கணிப்பொறி அறிவியல், அரசினர் தொழில்நுட்பக்கல்லூரி/ அரசு கலைக்கல்லூரி.
12. தலைமையாசிரியர், சுவாமி சிவானந்தா மேல்நிலைப்பள்ளி, பெரியநாயக்கன்பாளையம்.
13. தலைமையாசிரியர், மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி, இராமலிங்கம்காலனி.
14. கணினி பயிற்றுநர்கள், மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி, ஒக்கிலியர்காலனி.
15. கணினி பயிற்றுநர்கள், மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி, பீளமேடு.

இதற்கென ரூ.10.00 இலட்சம் செலவினத்தை மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும், அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்க கல்வி பூங்காக்கள் மற்றும் விளையாட்டுமைதானங்கள் குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டது.

மாநகராட்சி கல்விக்குழு தீர்மான எண்.12 நாள்.08.05.2013-ன்படி அனுமதிக்கப் பட்டுள்ளது. எனவே மாநகராட்சி இர.ச.புரம் காதுகேளாதோர் உயர்நிலைப்பள்ளியில் பயிலும் 36 மாணவர்கள் மற்றும் 6 மாணவிகளுக்கு ‘டேப்லெட்’ பெற்று வழங்கவும் ‘டேப்லெட்களின் தரம் (Specification/Configuration) குறித்து பரிந்துரைசெய்ய நிபுணர்குழு அமைத்திடவும், இதற்கென ரூ.10.00 இலட்சம் செலவினத்தை மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள கல்வி பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழுவின் ஒப்புதலுடன் மாமன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :- ஒப்புதல் அளிக்கலாம். எண். 3329/2013/ கே 9

## <u>மாநகர மன்ற தீர்மானம் எண் 61 நாள் 18.06.2013</u>

கல்வி, பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழு தீர்மானம் எண் 12 நாள் 08.05.2013ன் தீர்மானத்திற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண்-6

பொருள் நிர்வாகம் - கல்வி - கோயம்புத்தூர் மாநகராட்சி -மாநகராட்சி பள்ளிகளில் 8 முதல் 12-ம் வகுப்பு வரை பயிலும் மாணவ,மாணவிகளுக்கு பன்முகப்பயிற்சி வழங்குதல் - ஆலோசனைகள் வழங்க நிபுணர் குழு அமைத்தல் - தொகை ரூ.10.00 இலட்சம் செலவிட அனுமதி வேண்டுவது - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சி 2013-2014-ம் ஆண்டிற்கான பயன்பாட்டுக் குறிக்கோளுடன் கூடிய வரவு செலவு திட்ட அறிக்கையில், தற்போது சமுதாயத்தில் நிலவி வரும் பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகளிலிருந்து தற்காத்துக்கொள்ளும் வகையில் மாநகராட்சி பள்ளிகளில் 8 முதல் 12-ம் வகுப்புவரை பயிலும் மாணவியருக்கு தன்னார்வதொண்டு நிறுவனங்களுடன் இணைந்து பல்வேறு பயிற்சிகள் வழங்கப்படும் என்றும் இதில் அசாதாரண சூழ்நிலைகளில் மாணவியர்கள் தங்களை பாதுகாத்துக் கொள்ளும் வகையில் பயிற்சிகள் வழங்கப்படுவதுடன் தன்னம்பிக்கை வளர்வதற்கு தொடர் ஆலோசனைகளும் வழங்கப்படும் .

மேலும் மாநகராட்சிப் பள்ளிகளில் 8 முதல் 12-ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் சரியான வழிமுறையில் செல்வதற்கு அவர்கள் மனதை செம்மைபடுத்திடவும் ஆலோசனைகள் வழங்கப்படும். இதன் மூலம் மாநகராட்சி பள்ளி மாணவ, மாணவியரின் மனோதைரியம் மற்றும் தன்னம்பிக்கை வலுப்பெறும் தமிழக மாநகராட்சிகளில் முதன் முறையாக இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் இத்திட்டத்திற்கு இந்நிதியாண்டில் ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மாநகராட்சிப் பள்ளிகளில் 8 முதல் 12-ம் வகுப்புவரை பயிலும் மாணவ/மாணவிகளுக்கு பன்முகப்பயிற்சி வழங்க ஆலோசனைகள் பரிந்துரைகள் மற்றும் கருத்துக்கள் வழங்கிட கீழ்க்கண்ட நபர்கள் அடங்கிய நிபுணர்குழு அமைத்திடவும்

1. ஆணையாளர் அவர்கள்.
2. துணை ஆணையாளர் அவர்கள்.
3. உதவி ஆணையாளர் கணக்குகள்.
4. மாநகர நல அலுவலர்.
5. மாநகராட்சி கல்வி அலுவலர்.
6. மேனேஜிங் டிரஸ்டி, அறம் பொது நல அறக்கட்டளை,
7. ஏரியா கமேண்டர், ஹோம் கார்ட்ஸ், கோவை,
8. ஒருங்கிணைப்பாளர் , சைல்ட் லைன், கோவை,
9. ஆய்வாளர்.B1, காவல் நிலையம் கோவை,
10. உதவி நகர்நல அலுவலர் கோயம்புத்தூர் மாநகராட்சி,
11. திருமதி.சி.கே.பரிமளா,தலைமையாசிரியை,
    மாநகராட்சி இருபாலர் மேல்நிலைப்பள்ளி, இர.ச.புரம்.
12. திருமதி.வனிதாமணி,தலைமையாசிரியை,
    மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி, வரதராஜபுரம்.
13. திருமதி.சண்முகசுந்தரி, உடற்கல்வி இயக்குநர்,
    மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, அரங்கநாதபுரம்.
14. திருமதி.குழந்தை தெரைசா, உடற்கல்வி ஆசிரியை,
    மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, இர.ச.புரம் (மேற்கு).

இதற்கென ரூ.10.00 இலட்சம் செலவினத்தை மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும், அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்க கல்வி பூங்காக்கள் மற்றும் விளையாட்டுமைதானங்கள் குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டது.

மாநகராட்சி கல்விக்குழு தீர்மான எண்.13 நாள்.08.05.2013-ன்படி அனுமதிக்கப்பட்டுள்ளது.

எனவே, மாநகராட்சிப் பள்ளிகளில் 8 முதல் 12-ம் வகுப்புவரை பயிலும் மாணவ/மாணவிகளுக்கு பன்முகப்பயிற்சி வழங்க ஆலோசனைகள் பரிந்துரைகள் மற்றும் கருத்துக்கள் வழங்கிட நிபுணர்குழு அமைத்திடவும், இதற்கென ரூ.10.00 இலட்சம் செலவினத்தை மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள கல்வி பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழுவின் ஒப்புதலுடன் மாமன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :- ஒப்புதல் அளிக்கலாம் எண். 3519/2013/ கே 9

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 62 நாள் 18.06.2013</u>**

கல்வி, பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழு தீர்மானம் எண் 13 நாள் 08.05.2013ன் தீர்மானத்திற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண்-7

| பொருள் | நிர்வாகம் - கல்வி - கோயம்புத்தூர் மாநகராட்சி – மாநகராட்சி பள்ளிகளில் 1-ம் வகுப்பு முதல் 5-ம் வகுப்பு வரை பயிலும் மாணவ,மாணவியர்களுக்கு எவ்விதக் கட்டணமுமின்றி (Free of Cost) பயிற்சி வழங்க அனுமதி வழங்குமாறு கோரியுள்ளதால் மேற்படி பயிற்சியினை அறிவுத்திருக்கோயில் ஆன்மீக கல்வி மையம் வழங்கிட அனுமதி அளிக்க – தொடர்பாக. |
|---|---|

----------------

கோயம்புத்தூர் மாநகராட்சி 2013-2014-ம் ஆண்டிற்கான பயன்பாட்டுக் குறிக்கோளுடன் கூடிய வரவு செலவு திட்ட அறிக்கையில், வளர்ந்து வரும் காலச்சூழலில் பல்வேறு குடும்ப சூழ்நிலைகளிலிருந்து கல்வி கற்க வரும் பள்ளி மாணவர்கள் மனதை ஒருமுகப்படுத்தி கல்வி கற்கும் விதமாக மாநகராட்சிப் பள்ளிகளில் பல்வேறு ஆக்கப்பூர்வமான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. குழந்தைப் பருவத்திலேயே உடலும் மனமும் வளம்பெற்று கல்வியில் நாட்டம் மேலோங்கிடும் வகையில், மாநகராட்சி ஆரம்பப்பள்ளிகளில் 1-ம் வகுப்பு முதல் 5-ம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவியருக்கு எளிய பிராணாயாமம் போன்ற மூச்சுப் பயிற்சிகள் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் காலை நேர வகுப்புகள் துவங்குவதற்கு முன் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட வரவு செலவு திட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு மாநகராட்சி ஆரம்பப்பள்ளிகளில் 1-ம் வகுப்பு முதல் 5-ம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவியருக்கு எளிய பிராணாயாமம் போன்ற மூச்சுப் பயிற்சிகள் கற்பிக்க காலை நேர வகுப்புகள் நடத்திட ஈஷா யோகா மையம், வாழும் கலைப்பயிற்சி மையம் மற்றும் அறிவுத்திருக்கோயில் ஆன்மீக கல்வி மையம் ஆகிய மையங்களை அணுகிய பொழுது நபர் ஒன்றிக்கு கட்டணம் செலுத்துமாறு ஈஷா யோகா மையம், வாழும் கலைப்பயிற்சி மையம் ஆகிய இரண்டு மையங்களும் தெரிவித்தன.

அறிவுத்திருக்கோயில் ஆன்மீக கல்வி மையம் தமிழக அரசால் வெளியிடப்பட்டுள்ள அரசாணை (1டி) எண்.264 பள்ளிக்கல்வித் (இ1)துறை நாள்.06.07.2012-ன்படி 1-ம் வகுப்பு முதல் 5-ம் வகுப்பு வரை பயிற்சி அளிக்க அனுமதி வழங்கியுள்ளதாகவும், அதற்குரிய பாடத்திட்டமும் வழங்கப்பட்டுள்ளதாகவும், தெரிவித்து அதன்படி கோயம்புத்தூர் மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு எவ்விதக் கட்டணமுமின்றி (Free of Cost) பயிற்சி வழங்க அனுமதி வழங்குமாறு கோரியுள்ளதால் மேற்படி பயிற்சியினை அறிவுத்திருக்கோயில் ஆன்மீக கல்வி மையத்திற்கு அனுமதி வழங்கலாம்.

இதற்கென மாமன்றத்திற்கு அனுமதி வேண்டி பொருள் வைக்க கல்வி பூங்காக்கள் மற்றும் விளையாட்டுமைதானங்கள் குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டது.

மாநகராட்சி கல்விக்குழு தீர்மான எண்.16 நாள்.08.05.2013-ன்படி அனுமதிக்கப் பட்டுள்ளது.

எனவே, 1-ம் வகுப்பு முதல் 5-ம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவியருக்கு எளிய பிராணாயாமம் போன்ற மூச்சுப் பயிற்சிகள் கற்பிக்க காலை நேர வகுப்புகள் நடத்திட ஈஷா யோகா மையம், வாழும் கலைப்பயிற்சி மையம் மற்றும் அறிவுத்திருக்கோயில் ஆன்மீக கல்வி மையம் ஆகிய மையங்களை அணுகிய பொழுது நபர் ஒன்றிக்கு கட்டணம் செலுத்துமாறு ஈஷா யோகா மையம், வாழும் கலைப்பயிற்சி மையம் ஆகிய இரண்டு மையங்களும் தெரிவித்ததால், கட்டணமின்றி இலவசமாக (Free of Cost) பயிற்சி வழங்க முன்வந்துள்ள அறிவுத்திருக்கோயில் ஆன்மீக கல்வி மையத்திற்கு அனுமதி வழங்க கல்வி பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழுவின் ஒப்புதலுடன் மாமன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :- ஒப்புதல் அளிக்கலாம். எண். 3521/2013/ கே 6

### <u>மாநகர மன்ற தீர்மானம் எண் 63 நாள் 18.06.2013</u>

கல்வி, பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழு தீர்மானம் எண் 16 நாள் 08.05.2013ன் தீர்மானத்திற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண்-8

நிர்வாகம் - கல்வி - கோயம்புத்தூர் மாநகராட்சி -மாநகராட்சி பள்ளிகளில் 10-ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு மாணவ,மாணவியர்களுக்கு தினசரி மாலையில் சிறப்பு வகுப்புகள் நடைபெற்று - தினசரி மாலை சிறப்பு வகுப்புகள் துவங்குவதற்கு முன்பு சிற்றுண்டி வழங்க நடவடிக்கை எடுக்க- ஆலோசனைகள் வழங்க நிபுணர் குழு அமைத்தல் - செலவிட அனுமதி வேண்டுவது - தொடர்பாக.

-------------

கோயம்புத்தூர் மாநகராட்சி 2013-2014-ம் ஆண்டிற்கான பயன்பாட்டுக் குறிக்கோளுடன் கூடிய வரவு செலவு திட்ட அறிக்கையில், அரசுப் பொதுத் தேர்வுகளை மிகவும் சிறப்பான முறையில் எழுதி தேர்ச்சி சதவீதத்தை அதிகரிக்கவும், மதிப்பெண்கள் அதிகம் பெறவும், மாநகராட்சி பள்ளிகளில் 10-ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு மாணவ/மாணவியர்களுக்கு தினசரி மாலையில் சிறப்பு வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. வரும் கல்வியாண்டில் 12-ம் வகுப்பில் 2790 மாணவ / மாணவிகளும், 10-ம் வகுப்பில் 2750 மாணவ / மாணவிகளும் சிறப்பு வகுப்புகளில் பயில உள்ளனர். இம்மாணவ/மாணவியருக்கு தினசரி மாலை சிறப்பு வகுப்புகள் துவங்குவதற்கு முன்பு சிற்றுண்டி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இதனால் மாணவ,மாணவியர் களைப்பின்றி படிப்பில் முழு ஈடுபாட்டுடன் கவனம் செலுத்தி நல்ல மதிப்பெண்கள் பெற இயலும். இதற்காக இந்நிதியாண்டில் ரூ.100.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட வரவு செலவு திட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு 12-ம் வகுப்பு மாணவர் ஒருவருக்கு நாள் ஒன்றிக்கு ரூ.30/- வீதம் 50 நாட்களுக்கு மொத்தம் 2800 மாணவர்களுக்கும், 10-ம் வகுப்பு மாணவர் ஒருவருக்கு நாள் ஒன்றிக்கு ரூ.25/- வீதம் 75 நாட்களுக்கு மொத்தம் 2800 மாணவர்களுக்கும், கீழ்காணுமாறு உத்தேச செலவினம் ஏற்படும்

12-ம் வகுப்பிற்கு 2800x30x50 = ரூ.42,00,000
10-ம் வகுப்பிற்கு 2800x25x75 = ரூ.52,50,000
-----------------
ரூ.94,50,000
=========

மேற்கண்ட வரவு செலவு திட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு மாநகராட்சிப் பள்ளிகளில் 10 மற்றும் 12-ம் வகுப்பு மாணவ/மாணவிகளுக்கு சிறப்பு வகுப்புகளில் சிற்றுண்டி வழங்குவது சார்பாக ஆலோசனைகள் பரிந்துரைகள் மற்றும் கருத்துக்கள் வழங்கிட கீழ்க்கண்ட நபர்கள் அடங்கிய நிபுணர்குழு அமைத்திட அனுமதி வேண்டி குறிப்பு சமர்ப்பிக்கப்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. ஆணையாளர் அவர்கள்.
2. துணை ஆணையாளர் அவர்கள்.
3. உதவி ஆணையாளர் கணக்குகள்.
4. மாநகராட்சி நகர் நல அலுவலர்.
5. மாநகராட்சி கல்வி அலுவலர்.
6. முதல்வர், உணவுத் திட்ட அலுவலர், அவினாசிலிங்கம் பல்கலைக்கழகம்.
7. மேலாளர், ஸ்ரீஅன்னபூரணா கௌரிசங்கர் குழுமம்.

இதற்கென ஏற்படும் செலவினத்தை மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மாமன்றத்திற்கு அனுமதி வேண்டி பொருள் வைக்க கல்வி பூங்காக்கள் மற்றும் விளையாட்டுமைதானங்கள் குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டது.

மாநகராட்சி கல்விக்குழு தீர்மான எண்.15 நாள்.08.05.2013-ன்படி அனுமதிக்கப் பட்டுள்ளது.

எனவே, 10 மற்றும் 12-ம் வகுப்பு மாணவ/மாணவிகளுக்கு தினசரி மாலை சிறப்பு வகுப்புகள் துவங்குவதற்கு முன்பு சிற்றுண்டி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இதனால் மாணவ,மாணவியர் களைப்பின்றி படிப்பில் முழு ஈடுபாட்டுடன் கவனம் செலுத்தி நல்ல மதிப்பெண்கள் பெற இயலும். இதற்காக இந்நிதியாண்டில் ரூ.100.00 இலட்சம் செலவினத்தை மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள கல்வி பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழுவின் ஒப்புதலுடன் மாமன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :-** ஒப்புதல் அளிக்கலாம். எண். 3529/2013/ கே 6

## மாநகர மன்ற தீர்மானம் எண் 64 நாள் 18.06.2013

கல்வி, பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழு தீர்மானம் எண் 15 நாள் 08.05.2013ன் தீர்மானத்திற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 9**

| | |
|---|---|
| பொருள் | கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட மாநகராட்சி வணிக வளாக கடைகள் -ஒதுக்கீடு செய்யப்பட்டு மூன்றாண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு 15 சதவீதம் வாடகை உயர்வு செய்யவும் மற்றும் ஒன்பது ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசின் ஆணைப்படி வாடகையை உயர்வு செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டுதல் – தொடர்பாக |
| பார்வை | 1)அரசாணை எண். 147 ந.நி.ம.கு.வ.(நநி4) துறை நாள். 30.12.2000.<br>2)அரசாணை எண். 92 ந.நி.ம.கு.வ துறை நாள். 03.07.2007.<br>3 வ.வி.ம.நி.குழு தீர்மான எண்.129நாள்.22.10.2012. |

*********

பார்வை 1 மற்றும் 2-ல் கண்ட அரசாணைகளின்படி நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகளை பொது ஏலம் விடுவதை தவிர்த்து குத்தகையினை நீட்டித்தல் குறித்து நெறிமுறைகளை பின்பற்ற உத்திரவிடப்பட்ட 30.12.2000-ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை அரசு ஆணை எண்.147-க்கு இணங்க மாமன்ற தீர்மான எண்.164 நாள் 28.10.2004-ன் படி மாதாந்திர உரிமக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது. கடைகளின் உரிமக்காலம் முடிவடைவதால் அரசாணை (நிலை) எண்.92–நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.03.07.07–ன் படி புதுப்பித்து 15% உயர்வு செய்து மாத வாடகை நிர்ணயம் செய்யவும் 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசாணையின் படி பொதுப்பணித்துறை வாடகை மதீப்பிடுகளின் அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்யவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

பார்வை 3-ல் காணும் வரி வதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.129 நாள்.22.10.12-ன் படி

1. அரசாணை எண்.92 ந.நி.ம.கு.வ துறை நாள்.03.7.2007-ல் தெரிவித்து உள்ளவாறு ஒதுக்கீடு பெற்று 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு வெளிசந்தை மதிப்பில் வாடகை உயர்வு செய்யவும், 9 ஆண்டுகள் முடிவடையாத கடைகளுக்கு 15% வாடகை உயர்வு செய்யவும் மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது.

2. கடைகள் பற்றிய முழு விவரங்களுடன் மாமன்றத்திற்கு பொருள் வைத்து ஒப்புதல் பெற தீர்மானிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் மத்திய மண்டலத்திற்குட்பட்ட மாநகராட்சி வணிக வளாக கடைகளில் ஒன்பது ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசின் ஆணைப்படி தற்போதைய சந்தை மதிப்பின் அடிப்படையில் பொதுபணித்துறையின் வாடகை மதிப்பீட்டு கணக்கீட்டின்படி வாடகையினை உயர்வு செய்யவும் மூன்றாண்டுகள் முடிவுற்ற கடைகளுக்கு 15 சதவீதம் வாடகை உயர்வு செய்யவும் (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது)

- வார்டு எண்.82 உக்கடம் பேருந்து நிலையம் மாநகராட்சி வணிக வளாக கடைகள் - 24 கடைகள்
- வார்டு எண்.82 என்.எச் ரோட்டியில் உள்ள மாநகராட்சி வணிக வளாக கடைகள் - 17 கடைகள்
- வார்டு எண்.80 ரங்கே வீதி மாநகராட்சி வணிக வளாக கடைகள் - 5 கடைகள்.

வார்டு எண்.82 உக்கடம் பேருந்து நிலையம் மாநகராட்சி வணிக வளாக கடைகளில் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ள திரு. சையத் இசாக் (O.S.No.360/11) திரு. சாகுல் அமீது (O.S.No.84/09), திரு. முகம்மது அயூப் (O.S.No.82/09), மற்றும் திரு.பீர்முகம்மது (O.S.No.2286/08), ஆகியோர் வழக்குகளை வாபஸ் பெறும் பட்சத்தில் வருவாய் இழப்பினை தவிர்க்கும் பொருட்டு வாடகையினை பொதுப்பணித்துறை வாடகை மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்யலாம்.

மேலும் உயர்வு செய்யப்பட்ட வாடகையினை நிர்ணயம் செய்து மற்றும் வித்தியாச வாடகையினை வசூல் செய்யவும் இத்துடன் சேவை வரி ரூ.12.36% யினை செலுத்துவதற்கும் ஒப்புக்கொள்ளும் உரிமதாரர்களுக்கு கடையினை புதிய வாடகை அடிப்படையில் உரிமம் புதுப்பித்து ஒப்படைக்கவும், ஒப்புக்கொள்ளாத உரிமதாரர்களின் கடைகளின் உரிமத்தை ரத்து செய்து மறு ஏலத்திற்கு கொண்டு வரவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்.10119 /2012 / அ1 (ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 65 நாள் 18.06.2013</u>**

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண். 10

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி – பொதுசுகாதாரப் பிரிவு – 10 இடங்களில் அம்மா உணவகங்கள் திறப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டது– அரசாணையைப் பதிவு செய்தல் – தொடர்பாக

*****

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.2) துறை அரசாணை எண். 79. நாள்.31.05.2013–ல் கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, திருப்பூர், சேலம், திருநெல்வேலி, ஈரோடு, வேலூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய 9 மாநகராட்சிகளில் ஒவ்வொரு மாநகராட்சிகளிலும் 10 அம்மா உணவகங்கள் வீதம் 90 இடங்களில் அம்மா உணவகங்களை அமைப்பதற்கு நகராட்சி நிர்வாக ஆணையருக்கு கீழ்க்கண்டவாறு அனுமதி அளித்து ஆணையிடப்பட்டுள்ளது.

- மாநகராட்சிகளால் தேர்வு செய்யப்படும் இடங்களில் இத்திட்டம் செயல்படுத்தலாம்.
- உணவகங்களை ஏற்படுத்த ஏற்கனவே உள்ள கட்டடங்களை பழுதுபார்க்கவும், காலியிடத்தில் புதிய கட்டடங்களை கட்டுவதற்கும், பாத்திரங்கள் மற்றும் இயந்திரங்களை வாங்குவதற்கும் ஆகும் செலவினம் அந்தந்த மாநகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
- 2012–2013 ஆம் ஆண்டிலிருந்து தமிழக அரசிற்கு மொத்த ஒதுக்கீடு (Bulk allotment ) செய்யப்பட வேண்டிய அரிசி மத்திய அரசால் வழங்கப்பெறும் பட்சத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடமிருந்து இத்திட்டத்திற்கான அரிசியை மானிய விலையில் பெறவும் அவ்வாறு இல்லையெனில் வெளிச்சந்தையில் அரிசி வாங்க ஆகும் முழு செலவினதையும் அந்தந்த மாநகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
- இதர உணவு பொருட்களான உளுந்து, துவரம்பருப்பு, சமையல் எண்ணெய், மிளகாய், புளி மஞ்சள் தூள், கடுகு, வெந்தயம் ஆகியவை அமுதம் /கூட்டுறவு சிறப்பங்காடிகளில் கொள்முதல் செய்யலாம்.
- காய்கறி வகைகளை அன்றாடம் வெளிச்சந்தையில் அன்றைய விலையில் கொள்முதல் செய்யலாம்.
- தயிரை ஆவின் நிறுவனத்திலிருந்து மொத்த விலை அடிப்படையில் கொள்முதல் செய்யலாம்.

- இத்திட்டத்தினை செயல்படுத்துவதன் மூலம் ஏற்படக் கூடிய பற்றாக்குறையை அந்தந்த மாநகராட்சியின் பொது நிதியிலிருந்து ஈடு செய்யலாம்.
- இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கான கீழ்க்காணும் அலுவலர்களை கொண்ட குழு ஒன்றினை சம்மந்தப்பட்ட மாநகராட்சிகள் அமைத்துக் கொள்ளலாம்.

1. மாநகர நல அலுவலர்
2. உதவி ஆணையாளர்
3. இளநிலை பொறியாளர்
4. கணக்கு அலுவலர்
5. வரித் தண்டலர் மற்றும்
6. சுகாதார ஆய்வாளர்

அரசாணை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- அரசாணையை பதிவு செய்யலாம் எண். 3265/2013/ எம்.இ.2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 66 நாள் 18.06.2013</u>**

அரசாணை பதிவு செய்யப்பட்டது

---

**பொருள் எண். 11**

பொருள்: பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – திருமதி. ஆர். ருக்மணி, நகர சுகாதார செவிலியர், இராமநாதபுரம் நகர் நல மையம் – திருப்பூர் மாநகராட்சிக்கு மாறுதல் கோருவது – தொடர்பாக.

------

கோயம்புத்தூர் மாநகராட்சி, இராமநாதபுரம் நகர் நல மையத்தில் நகர சுகாதார செவிலியராக பணிபுரியும் திருமதி. ஆர். ருக்மணி அவர்கள் தனக்கு 6 மாத கைக்குழந்தை உள்ளதாகவும் தனது சொந்த ஊரான அலகுமலை கிராமம், சேமலைகவுண்டம்பாளையத்திலிருந்து தினமும் 120 கிலோ மீட்டர் பயணம் செய்து பணிக்கு வருவதாகவும் தெரிவித்துள்ளார். எனவே இவரது நீண்டதூர பயண சிரமம், 6 மாத கைக்குழந்தையின் பாதுகாப்பினையும், தனது கணவர் மற்றும் வயதான மாமனார், மாமியார் ஆகியோரது நலத்தினையும் கருத்திற் கொண்டு தனக்கு திருப்பூர் மாநகராட்சிக்கு பணிமாற்றம் செய்து தருமாறு விண்ணப்பித்துள்ளார்.

எனவே, திருமதி. ஆர். ருக்மணி, நகர சுகாதார செவிலியரை திருப்பூர் மாநகராட்சியில் நகர சுகாதார செவிலியர் பணியிடத்திற்கு ஒரு வழி மாறுதல் செய்ய மன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u> அனுமதிக்கலாம். மாமன்ற அனுமதிக்குப் பின் மேற்படி தீர்மானத்தை ஆணையர், திருப்பூர் மாநகராட்சி அவர்களுக்கு அனுப்பி வைக்கலாம்.

ந.க.எண்.5452/2013/எம்சி3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 67 நாள் 18.06.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்தும், தீர்மான நகலை திருப்பூர் மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு அனுப்பவும் தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண். 12**

பொருள் : பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – வளர்ச்சிப் பணிகள் தொய்வின்றி நடைபெறுவதற்கு ஒப்பந்த அடிப்படையில் தொழில்நுட்ப உதவியாளர்கள் – நியமிப்பது – சம்பந்தமாக

-----

கோயம்புத்தூர் மாநகராட்சியில் தொழில்நுட்ப உதவியாளர் பணியிடத்திற்கு 4 பணியிடங்களும், இணைக்கப்பட்ட பகுதிகளிலிருந்து 3 பணியிடங்களும் அனுமதிக்கப்பட்டு, மொத்தம் 7 தொழில்நுட்ப உதவியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். மேற்படி 7 பணியிடங்களில் 3 தொழில்நுட்ப உதவியாளர் பணியிடங்களுக்கு தற்போது இளம் பொறியாளர் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

அரசாணை எண்.114, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.25.08.2011–ன்படி, கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் 11 உள்ளாட்சி அமைப்புகள் இணைக்கப்பட்டு 100 வார்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளதால், மேற்படி 100 வார்டுகளில் அடிப்படை கட்டமைப்பு வசதிகள், குடிநீர் விநியோகம் போன்ற அத்தியாவசிய பணிகள் செம்மையாக நடைபெற பொறியியல் பிரிவில், இளம் மற்றும் உதவிப் பொறியாளர்களுக்கு உதவியாக கூடுதலாக 75 தொழில்நுட்ப உதவியாளர்களை நியமனம் செய்ய மாமன்றத் தீர்மான எண். 318, நாள். 28.12.2012–ன்படி அரசுக்கு கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

போதிய அளவில் தொழில்நுட்ப உதவியாளர்கள் இல்லாததால், மாநகராட்சி மூலம் நடைபெறும் அனைத்து வளர்ச்சிப் பணிகளிலும் தொய்வு ஏற்படும் நிலை உள்ளது.

எனவே மாநகராட்சி மூலம் நடைபெறும் அனைத்து வளர்ச்சிப் பணிகளையும் நல்ல முறையில் காலதாமதமின்றி உரிய காலத்தில் செயல்படுத்த அரசிடம் கோரப்பட்டுள்ள 75 தொழில்நுட்ப உதவியாளர்கள் பணியிடத்திற்கு அரசின் அனுமதி பெறப்படும் வரை தற்காலிகமாக ஆறு மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் 30 தொழில்நுட்ப உதவியாளர்களை நியமனம் செய்யவும், இதற்காகும் உத்தேச செலவினம் ரூ. 18/–இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டியும் மன்றத்தின் ஒப்புதலுக்காக பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண். 5450 /2013/எம்சி1

**மாநகர மன்ற தீர்மானம் எண் 68 நாள் 18.06.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண். 13**

## நகர தொலை நோக்கு பார்வை

திட்டமிட்ட நகர அபிவிருத்தி, சேவை தரத்தை உயர்த்துதல், அதன் அடிப்படையில் நகர மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தவும், போட்டிமிகு பொருளாதார வளர்ச்சியில் உலக நகரங்களில் முதலிடத்தை அடைவது, சுற்றுச் சூழலை பாதுகாக்கும் வகையில் நிலையான வளர்ச்சியை உருவாக்குவது.

## செயலாக்கம்

1. நிர்வாக ஆளுமையை மேம்படுத்துதல், சீர்திருத்தங்களை செயல்படுத்துதல்.
2. எதிர்கால நகர வளர்ச்சிக்கேற்ப உள் கட்டமைப்பை ஏற்படுத்துதல்.
3. பொது போக்குவரத்து மற்றும் எரிபொருள்சாரா போக்குவரத்து திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்தல்.
4. நீர்நிலைகளில் நீர்தேக்கம் அதிகப்படுத்தி, சுகாதாரமாக பேணி பொதுமக்களுக்கு பயன்படும் வகையில் புனரமைத்தல்.
5. திடக் கழிவு மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பை சுற்று சூழலை பாதுகாக்கும் வகையில் மேம்படுத்துதல்.
6. 24 மணி நேரமும் குடிநீர் வழங்கும் திட்டத்தினை செயல்படுத்துதல்.
7. செயலாக்கத்தில் சிறக்க நவீன யுக்திகளை தொடர்ந்து உட்புகுத்துதல்.

முன்னுரிமை அடிப்படையில் கீழ்கண்ட நடவடிக்கைகளை உடன் அமுல்படுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

1. பொது மக்களிடம் விழிப்புணர்வு மற்றும் கல்வி அறிவு சமுதாயத்தில் உருவாக்கப்பட வேண்டும். திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் தொண்டு நிறுவனங்களை பங்கேற்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
2. அபாயமான அருவருக்கத்தக்க கழிவுகளை பாதுகாப்பான முறையில் அழிக்கப்பட வேண்டும்.
3. திடக்கழிவுகளில் இருந்து வாயு எரிபொருள் உருவாக்கி அதன் அடிப்படையில் மின்சாரம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
4. கட்டிடம் மற்றும் இடிமான கழிவு பொருட்களை கொண்டு கட்டுமான பொருட்களாக மாற்றவும் அதனை செயல்படுத்த அதற்கான தொழிற்சாலை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
5. ரேஸ்கோர்ஸ் சாலையில் நடைபாதைக்கு இருபுறமும் உள்ள பூங்காவை மேம்படுத்தி அவர்களது செலவில் பராமரிப்பதற்கு முன்வரும் வணிக நிறுவனங்களின் வசம் அப்பணியை ஒப்படைத்தல்.

மேற்கண்ட அத்தியாவசிய திட்டங்களை முன்னுரிமை அடிப்படையில் நிறைவேற்ற மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண். /2013/எம்.எச்.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 69 நாள் 18.06.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண். 14

| பொருள் | பொறியியல் பிரிவு - சட்டமன்ற வரவு செலவு திட்ட கூட்டத் தொடரில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு – நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்திற்கு புதிய கட்டிடம் கட்டுதல் – அந்தந்த மாநகராட்சிகள்/நகராட்சிகள் உறுப்பினராகும் பொருட்டு வழங்க வேண்டிய நிதி பங்களிப்பினை மாநில நிதிக்குழு பரிந்துரை மானியத்திலிருந்து மூன்று தவணைகளில் பிடித்தம் செய்து கொள்வதற்கு இசைவு தெரிவிக்க மாமன்ற அனுமதி கோருதல் – தொடர்பு. |
|---|---|

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடித எண்.30322/2012/இ3 நாள் 28/05/2003ல் நடைபெற்ற சட்டமன்ற வரவு செலவு திட்ட கூட்டத்தொடரில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்கள் நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்திற்கு புதிய அலுவலக கட்டிடம் ரூ25.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும் என வெளியிட்ட அறிவிப்பினை தொடர்ந்து புதிய அலுவலக கட்டிடத்தினை அனைத்து மாநகராட்சிகள்/நகராட்சிகளின் நிதி பங்களிப்புடன் கட்டுவதற்கு கட்டிட சங்க விதிமுறைகள் (Builder Society Bye Law) ஏற்படுத்தப்பட்டு அரசுக்கு அனுப்பி ஆணை எதிர்பார்க்கப்படுகிறது எனவும், இக்கட்டிட சங்கத்தில் மாநகராட்சிகள்/நகராட்சிகள் உறுப்பினராகும் பொருட்டு அந்தந்த மாநகராட்சிகள்/நகராட்சிகள் வழங்க வேண்டிய நிதி பங்களிப்பினை உறுதி செய்யும் பொருட்டும், மேற்படி நிதி பங்களிப்பினை மாநில நிதிக்குழு பரிந்துரை மானியத்திலிருந்து மூன்று தவணைகளில் நகராட்சி நிர்வாக ஆணையர் பிடித்தம் செய்து கொள்வதற்கு இசைவு தெரிவித்து உரிய தீர்மானம் இயற்றி ஒரு வார காலத்திற்குள் அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்திற்கு புதிய அலுவலக கட்டிடம் அனைத்து மாநகராட்சிகள்/ நகராட்சிகள் நிதி பங்களிப்புடன் கட்டுவதற்கு, கட்டிட சங்க விதிமுறைகள் (Builder Society Bye Law) ஏற்படுத்தப்பட்டு அரசுக்கு அனுப்பி ஆணை எதிர்பார்க்கப்படும் இக்கட்டிட சங்கத்தில் கோயம்புத்தூர் மாநகராட்சி உறுப்பினராகும் பொருட்டும், கோயம்புத்தூர் மாநகராட்சி வழங்க வேண்டிய நிதி பங்களிப்பினை உறுதி செய்யும் பொருட்டும், மேற்படி நிதி பங்களிப்பினை மாநில நிதிக்குழு பரிந்துரை மானியத்திலிருந்து மூன்று தவணைகளில் நகராட்சி நிர்வாக ஆணையர் பிடித்தம் செய்து கொள்வதற்கு ஒப்புதல் தெரிவிக்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம். மாமன்றத் தீர்மானத்தினை நகராட்சி நிர்வாக ஆணையர் , சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கலாம்.

ந.க.எண்.5010/2013/எம்.டி.2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 70 நாள் 18.06.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்தும், தீர்மான நகலை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பவும் தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண்: 15

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி – நகரமைப்பு பிரிவு – கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டப்படும் கட்டிடங்களுக்கு உரிமம் வழங்குதல் – 01.04.2002 முதல் கட்டிட உரிமக் கட்டணம் அமுல் படுத்தப்பட்டு 10 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டபடியால் மாநகராட்சியின் வருவாய் நிலை மற்றும் ஜவஹர்லால் நேரு தேசிய நகர புனரமைப்பு திட்ட நிபந்தனைப்படி உரிமக் கட்டணத்தை கூடுதலாக்கி திருத்தி அமைக்க மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பித்தல் - தொடர்பாக.

*******

கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் 1981, பிரிவு 451(2)ன் படியும், மாநகர மன்றத் தீர்மான எண்.400 நாள்.28.03.2002 ன் படியும், கோயம்புத்தூர் மாநகர எல்லையில் கட்டப்படும் கட்டிடங்களுக்கு உரிமம் வழங்குதல் மற்றும் இயந்திர நிறுவனங்களுக்கு அனுமதி வழங்குதல் ஆகியவைகளுக்கான கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு இக்கட்டண விகிதங்கள் 1.4.2002-ம் தேதி முதல் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது 31.07.2012-ம் தேதியுடன் 10 வருடங்கள் ஆகிவிட்டதால், தற்போது மாநகராட்சியின் வருவாய் நிலையைக் கருத்தில் கொண்டும், ஜவஹர்லால் நேரு தேசிய நகர புனரமைப்புத் திட்ட நிபந்தனையின்படியும் இக்கட்டணங்களை உயர்த்தி திருத்தி அமைப்பது மிக அத்தியாவசியமான ஒன்றாகும்.

மேலும், தற்போது நடைமுறைக்கு ஏற்றவாறும், அருகாமையில் உள்ள மாநகராட்சிகளின் கட்டணங்களை ஒப்பிட்டும், ஏற்கனவே இருந்த கட்டிட அனுமதி காலம் இரண்டாண்டில் இருந்து மூன்றாண்டாடிற்கு திருத்தியும், கட்டணங்கள் விகிதத்தை உயர்த்தியும், புதிய இனங்களுக்கான கட்டணம் நிர்ணயம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நடைமுறையில் உள்ள கட்டணங்களை ஆய்வு செய்து புதிய கட்டணங்களை வசூலிக்கவும், மூன்றாண்டிற்கான கட்டிட அனுமதி வழங்கவும் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- ஒப்புதல் வழங்கலாம் ந.க.எண்.18831/2007/எம்.எச்.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 71 நாள் 18.06.2013**

பொருளில் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையின் வரிசை எண் 1-ல் கட்டண விகிதங்களின் விபரம் என்ற கலத்தில் இரண்டு மாடிகளுக்குகீழ் என்ற தலைப்பின்கீழ்,
அ) குடியிருப்பு கட்டணம் தரைத்தளம் மற்றும் பாகத்திற்கு மாற்றியமைக்கப்பட்ட கட்டணம் ரூ. 200-
ஆ) கீழ்நிலை செல்லார்-க்கு மாற்றியமைக்கப்பட்ட கட்டணம் ரூ. 400-
இ) முதல்தளம் ரூ.300- என்பதற்குப் பதிலாக ரூ. 250- என்று சேர்த்தும்,

இரண்டு மாடிகளுக்கு மேல் என்ற தலைப்பின்கீழ்
அ) முதல் எ) வரை குறிப்பிட்டுள்ள இனங்களுக்கு அட்டவணையில் குறிப்பிட்டுள்ள மாற்றியமைக்கப்பட்ட கட்டணங்களை நிா்ணயித்தும், அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

இக்கட்டண விகிதங்களை 01.10.2013 முதல் அமல்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 16**

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண் 38ல் உள்ள வ.உ.சி. பிரதான சாலைகள் அமைக்கும் பணிக்கு ரூ. 74.80 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. விளாங்குறிச்சி சாலை பீளமேடு ரயில்வே நிலையம் அருகில் ரயில்வே மேம்பாலம் கட்டப்பட உள்ளதால் போக்குவரத்து இச்சாலையில் நிறுத்தப்பட உள்ளது.

இச்சாலையை உறுதிப்படுத்தவும், மறுதார்தளம் இடுவதற்கும், இம்மதிப்பீடு அவசியமாகிறது. எனவே, மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம். ந.க.எண் 4184/2013/எம்.டி. 2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 72 நாள் 18.06.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 17**

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண் 38ல் உள்ள செங்காளியப்பன் நகர் பிரதான மற்றும் குறுக்கு சாலைகளை ரயில்வே தரைப்பாலம் வரை பலப்படுத்தி அகலப்படுத்துதல் பணிக்கு ரூ. 57.80 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. விளாங்குறிச்சி சாலை பீளமேடு ரயில்வே நிலையம் அருகில் ரயில்வே மேம்பாலம் கட்டப்பட உள்ளதால் போக்குவரத்து இச்சாலையில் நிறுத்தப்பட உள்ளது.

மேம்பாலம் அமைக்கப்பட உள்ள சாலைக்கு மாற்றுப் பாதையாக போக்குவரத்தை திருப்பிவிட செங்காளியப்பன் நகர் பிரதான மற்றும் குறுக்கு சாலைகளை பலப்படுத்தி அகலப்படுத்தி ரயில்வே தரைப்பாலம் வரை சாலை அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இச்சாலையை உறுதிப்படுத்தவும், மறுதார்தளம் இடுவதற்கும், இம்மதிப்பீடு அவசியமாகிறது. எனவே, மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம். ந.க.எண் 4183/2013/எம்.டி. 2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 73 நாள் 18.06.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 18**

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண் 38ல் உள்ள ரயில்வே தரைப்பாலத்தின்கீழ் கான்கிரீட் சாலை அமைத்தல் மற்றும் தடுப்புச்சுவர் கட்டவும், செங்காளியப்பன் நகர் பிரதான சாலை முதல் எல்லைத்தோட்டம் சாலை விரிவு மற்றும் மாற்றுச்சாலை அமைத்தல் பணிக்கு ரூ. 73.20 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. விளாங்குறிச்சி சாலை பீளமேடு ரயில்வே நிலையம் அருகில் ரயில்வே மேம்பாலம் கட்டப்பட உள்ளதால் போக்குவரத்து இச்சாலையில் நிறுத்தப்பட உள்ளது.

மேம்பாலம் அமைக்கப்பட உள்ள சாலைக்கு மாற்றுப் பாதையாக போக்குவரத்தை திருப்பிவிட செங்காளியப்பன் நகர் பிரதான சாலை முடிய எல்லைத்தோட்டம் சாலை விரிவு வரை மாற்றுச்சாலை அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இச்சாலையை உறுதிப்படுத்தவும், மறுதார்தளம் இடுவதற்கும், இம்மதிப்பீடு அவசியமாகிறது. எனவே, மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம். ந.க.எண் 6413/2013/எம்.டி. 2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 74 நாள் 18.06.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 19**

| | |
|---|---|
| பொருள் | கோவை மாநகராட்சி - தனியார் டேங்கர் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் மேற்கொள்வது– மதிப்பீட்டுத் தொகையான ரூ.75,00,000/- க்கு நிர்வாக அனுமதி வேண்டுவது - தொடர்பாக. |

கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட 5 மண்டலங்களுக்குட்பட்ட 100 வார்டுகளில் அழுத்தம் குறைவுள்ள பகுதி, குடிசை பகுதி, மேடான பகுதி தவிர பராமரிப்பு பணிகளான குடிநீர் கசிவு சரிசெய்தல், நெடுஞ்சாலைத் துறை சாலைகள் அகலப்படுத்துதல் பணிகளின் போது சேதமடையும் பிரதான குடிநீர் குழாய்களை மாற்றியமைத்தல், கோடை காலத்தில் மின்தடை நேரங்களில் ஏற்படும் குடிநீர் விநியோக தடை காலங்களில் மற்றும் குடிநீர் சம்பந்தமான அன்றாடம் பெறப்படும் புகார்களுக்கு ஏற்றவாறு டேங்கர் லாரிகள் மூலம் 1)பாரதி பூங்கா 2)புலியகுளம் 3)வரதராஜபுரம் 4)கணபதி MSR மற்றும் 5)சாரதாமில்(சுந்தராபுரம்) மேல்நிலைத் தொட்டிகளிலிருந்து, மாநகராட்சியுடன் புதியதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கும் சேர்த்து மாநகராட்சி டேங்கர் லாரிகள் 7 எண்ணிக்கை தவிர தேவைக்கேற்ப தனியார் டேங்கர் லாரிகள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

தற்சமயம் தனியார் டேங்கர் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகிக்கப்பட்டு மதிப்பீட்டு ஒப்பந்த தொகை முடிவடையவுள்ளதால் மதிப்பீடு ரூ.75,00,000/- க்கு நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 5087 /2013/_MD2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 75 நாள் 18.06.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 20**

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சியில் புதியதாக இணைக்கப்ப்டட பகுதிகள் கவுண்டம்பாளையம் வடவள்ளி பகுதிகளில் குடிநீர் பகிர்மான குழாய்கள் அமைத்தல் மற்றும் பில்லூர் திட்டம் IIலிருந்து குழாய் அமைத்து குடிநீர் விநியோகம் செய்யவும் – இப்பணிகளுக்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ1687 லட்சத்துக்கு நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதிக்கு நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு பிரேரணை அனுப்ப மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் – தொடர்பாக.

-------------

கோயம்புத்தூர் மாநகராட்சியில் புதியதாக இணைக்கப்பட்ட பகுதிகளான கவுண்டம்பாளையம், வடவள்ளி, குறிச்சி, குனியமுத்தூர் பகுதிகளில் உள்ள வார்டு எண்கள்.5,6,7,8,9,16,17 மற்றும் 87 முதல் 100 வரையிலான 14 வார்டுகள் அடங்கிய பகுதிகளுக்கு பில்லூர் 2வது திட்டம் மற்றும் ஆழியாறு கூட்டுக் குடிநீர் திட்டங்களை இணைத்தல் மற்றும் கவுண்டம்பாளையம், வடவள்ளி பகுதிகளில் குடிநீர் பகிர்மான குழாய்கள் அமைத்தல் போன்ற குடிநீர் உள்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளவும், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளிலிருந்து 24 X7 திட்டத்தின் குடிநீர் விநியோகம் செய்யக் கூடிய அளவிற்கு குழாய் வடிவமைப்பு செய்து சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்ய விரிவான திட்ட அறிக்கை தயார் செய்வதற்கான நடவடிக்கைகள் (EOI, RFQ & RFP) தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்படி, குடிநீர் திட்டப் பணிகளுக்கு உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ28.25 கோடிக்கு மானிய நிதி உதவி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு பிரேரணை அனுப்பப்பட்டுள்ளதை தொடர்ந்து கீழ்க்கண்ட பணிகளுக்கு 2013–2014 ஆண்டுக்கான இயக்குதல் மற்றும் பராமரித்தல் இடைநிரப்பு நிதி மற்றும் உள்கட்டமைப்பு இடைநிரப்பு நிதியின் கீழ் 1113.62 லட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ லட்சத்தில்) | ஒதுக்கீட்டுத் தொகை (ரூ லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | இயக்குதல் மற்றும் பராமரித்தல் இடைநிரப்பு நிதி (2013–2014)<br>பில்லூர் II வது குடிநீர் திட்டம் மற்றும் ஆழியாறு குடிநீர் திட்டத்துடன் குழாய் அமைத்து இணைத்தல் மற்றும் கவுண்டம்பாளையம் பகுதியில் குடிநீர் பகிர்மான குழாய்கள் அமைத்தல் | 1017.00 | 713.62 |
| 2 | உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதி 2013–2014<br>வடவள்ளி பகுதிகளில் குடிநீர் பகிர்மான குழாய் அமைத்தல் | 670.00 | 400.00 |
| | மொத்தம் | 1687.00 | 1113.62 |

மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளான கவுண்டம்பாளையம், வடவள்ளி, மற்றும் வீரகேரளம் பகுதிகளுக்கான குடிநீர் பகிர்மான குழாய்கள் அமைத்தல் மற்றும் பில்லூர் IIவது குடிநீர் திட்டம் மற்றும் ஆழியாறு குடிநீர் திட்டத்துடன் குழாய் அமைத்து இணைத்தல் பணிகளுக்கான உத்தேச மதிப்பீட்டு தொகை கீழ்க்கண்டவாறு கொடுக்கப்படுகிறது.

| வ.எண் | இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்பு | உத்தேச மதிப்பீட்டுத் தொகை | நிதி ஒதுக்கீடுத் தொகை |
|---|---|---|---|
| இயக்குதல் மற்றும் பராமரித்தல் இடைநிரப்பு நிதி (2013–2014) | | | |
| 1 | கவுண்டம்பாளையம் வார்டு எண்கள். 5 மற்றும் 6 | 307.00 லட்சம் | 200.00 லட்சம் |
| 2 | கவுண்டம்பாளையம் வார்டு எண்கள். 7,8 மற்றும் 9 | 330.00 லட்சம் | 266.62 லட்சம் |
| 3 | பில்லூர் II வது குடிநீர் திட்டம் மற்றும் ஆழியாறு குடிநீர் திட்டத்துடன் குழாய் அமைத்து இணைத்தல் | 380.00 லட்சம் | 247.00 லட்சம் |
| உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதி 2013–2014 | | | |
| 4 | வீரகேரளம் வார்டு எண்கள்.18 மற்றும் 19 | 304.50 லட்சம் | 182.00 லட்சம் |
| 5 | வடவள்ளி வார்டு எண்கள்.16 மற்றும் 17 | 365.50 லட்சம் | 218.00 லட்சம் |
| | மொத்தம் | 1687.00 லட்சம் | 1113.62 லட்சம் |

மேற்கண்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகைக்கு 5 சிப்பங்களாக பிரித்து பணிகள் மேற்கொள்ளவும் நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு பிரேரணை அனுப்பவும் மேலும் தற்போது மானிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த மதிப்பீட்டுத் தொகையில் ரூ1687.00 லட்சத்தில் மானியத் தொகை ரூ 1113.62 லட்சம் போக மீதத் தொகை ரூ573.38 லட்சம் மாநகராட்சி குடிநீர் நிதியில் பணி மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

1.அ உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ1687.00 லட்சத்திற்கு 5 சிப்பங்களாக பிரித்து பணிகள் மேற்கொள்ளவும் நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி வேண்டி பிரேரணை அனுப்ப மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

1ஆ. உத்தேச மதிப்பீட்டுத் தொகையில் ரூ1687.00 லட்சத்தில் மானியத் தொகை ரூ 1113.62 லட்சம் போக மீதத் தொகை ரூ573.38லட்சம் மாநகராட்சி குடிநீர் நிதியில் பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.648/2013/எம்.டி.1

**மாநகர மன்ற தீர்மானம் எண் 76 நாள் 18.06.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**(ஒப்பம்) செ.ம. வேலுசாமி**
**மேயர்**
கோயம்புத்தூர் மாநகராட்சி

**பொருள் எண் 15 ன் இணைப்பு**

## கோயம்புத்தூர் மாநகராட்சி

அறிவிக்கை

ந.க. எண். 18831/ 2007 / MH5: நாள். .2013

கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் 1981 பிரிவு 451 (2) ன் படியும், கோயம்புத்தூர் மாநகர மன்றத்தின் - ந் தேதிய எண்ணிட்ட தீர்மானத்தின்படியும் கோயம்புத்தூர் மாநகர எல்லைக்குள் கட்டுப்பட்டும் கட்டிடங்களுக்கு உரிமம் வழங்குதல் மற்றும் இயந்திர நிறுவனத்தினங்களுக்கு அனுமதி வழங்குதல் ஆகியவைகளுக்கு கீழ்க்கண்டவாறு திருத்திய கட்டணம் நிா்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்த கட்டண விகிதம் 01.04.2002 –ம் தேதி மாமன்றத்தின் தீர்மானத்தின் படி அமுலுக்கு வருகிறது.

| வ.எண் | கட்டண விதிப்பின் விபரம் | | அளவு | அனுமதிகாலம் | | தற்போதுள்ள கட்டணம் | மாற்றியமைக்கபட்ட கட்டணம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | தற்போதுள்ள ஆண்டுகாலம் | மாற்றி அமைக்கப்பட்ட ஆண்டுகாலம் | | |
| 1 | 2 | | 3 | 4 | | 5 | 6 |
| 1. | குடியிருப்பு கட்டிடம் கட்ட அல்லது புதுபித்து கட்ட திருத்திக் கட்டிக்கொள்ள, கூடுதல் கட்டிடம் கட்டிக் கொள்ள கூரை மாற்றம் முதலியவைகளுக்கு | | 10 ச.மீ | 2 ஆண்டு | 3 ஆண்டு | | |
| | அ | குடியிருப்புக் கட்டிடம் தரைத் தளம் மற்றும் பாகத்திற்கு | | | | 70 | 250 |
| | ஆ | கீழ நிலை செல்லாா் | | | | 130 | 500 |
| | இ | கீழ்நிலை அறை செல்லாா் / முதல் தளத்திற்கு தரைத்தளத்திற்கும் இடைப்பட்ட தளம் | | | | 80 | 300 |
| | ஈ | முதல் தளம் | | | | 90 | 400 |
| | உள | இரண்டாம் தளம் | | | | 120 | 500 |
| | உள | மூன்றாம் தளம் | | | | 140 | 600 |
| | எ | நான்கு மற்றும் அதற்கு மேல் உள்ள மாடி ஒவ்வொரு தள கட்டிடம் 10 ச.மீ / பாகத்திற்கு | | 2 ஆண்டு | 3 ஆண்டு | 250 | 1000 |
| 2 | சேவைக் கட்டணம் குடியிருப்பு, வணிகம், தொழிற்சாலை கட்டிடம் ஆகிய அனைத்திற்கும் கட்டிட இடிபாடுகள் அகற்ற | | 10 ச.மீ அதன் பாகத்திற்கு மேல் | | | 125 | 500 |
| 3 | வணிக கட்டிடம் | | 10 ச.மீ அதன் பாகத்திற்கு மேல் | | | | |
| | அ | தரைத்தளத்திற்கு | 10 ச.மீ அதன் பாகத்திற்கு மேல் | 2 ஆண்டு | 3 ஆண்டு | 100 | 600 |
| | ஆ | கீழ்நிலை அறை செல்லாா் | | | | 190 | 1000 |
| | இ | கீழ்நிலை அறை (செல்லாா் தரை தளம் இடைப்பட்ட பகுதி) | | | | 130 | 700 |
| | ஈ | முதல் தளம் | | | | 130 | 700 |
| | உள | இரண்டாம் தளம் | | | | 150 | 800 |
| | உள | 3 –ம் தளம் | | | | 180 | 900 |
| | எ | நான்கு மற்றும் அதற்கு மேல் உள்ள தளங்கள் | | 2 ஆண்டு | 3 ஆண்டு | 400 | 1800 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4 | நீராவிசக்தி அல்லது தண்ணீர் சக்தி அல்லது இயந்திர சக்தி அல்லது மின்சார சக்தி திட்டமுள்ள தொழிற்சாலை அல்லது வேலை செய்யும் இடத்திற்கு கட்டிடம் கட்டிக் கொள்ள கூடுதல் கட்டிடம் கட்டிக் கொள்ள மற்றும் கூரை மாற்றம் முதலியவைகளுக்கு<br>அ. தரைத்தளத்திற்கு | 10 ச.மீ அதன் பாகத்திற்கு மேல் | 2 ஆண்டு | 3 ஆண்டு | 100 | 400 |
| | ஆ முதல் தளம் | 10 ச.மீ அதன் பாகத்திற்கு மேல் | 2 ஆண்டு | 3 ஆண்டு | 130 | 700 |
| | இ 2- ம் தளம் | | | | 150 | 800 |
| | ஈ 3-ம் தளம் | | | | 180 | 900 |
| | உ 4 மற்றும் அதற்கு மேல் உள்ள தளங்கள் | | | | 400 | 1800 |
| 5 | அங்கீகாரம் செய்யப்பட்ட வரைபட நகல் ஒவ்வொன்றுக்கும் | | | | 20 | 80 |
| 6 | அங்கீகாரம் செய்யப்பட்ட மனைப்பிரிவு வரைபட நகல் ஒவ்வொன்றுக்கும் | | | | 120 | 400 |
| 7 | மனைப்பிரிவு விண்ணப்பத்திற்கு ஆய்வு கட்டணம் (1ஏக்கர் மற்றும் அதன் பாகம்) | | | | 1250 | 5000 |
| 8 | நீராவி சக்தி, தண்ணீர் சக்தி அல்லது மின்சார சக்தி மூலம் இயங்கும் இயந்திரங்கள் நிறுவ ஸ்தாபித கட்டணம் ஒரு முறை மட்டும் | | | | 200 | 500 |
| | 1 1 முதல் 5 குதிரை திறன் வரை | | | 3 ஆண்டு | 300 | 600 |
| | 2 5 – க்கு மேல் 10 குதிரை திறன் வரை | | | | 500 | 1500 |
| | 3 10 – க்கு மேல் 20 குதிரை திறன் வரை | | | | 800 | 2000 |
| | 4 20 – க்கு மேல் 30 குதிரை திறன் வரை | | | | 1000 | 3000 |
| | 5 30 – க்கு மேல் 40 குதிரை திறன் வரை | | | | 1500 | 5000 |
| | 6 40 – க்கு மேல் 50 குதிரை திறன் வரை | | | | 2000 | 6000 |
| | 7 50 – க்கு மேல் 100 குதிரை திறன் வரை | | | | 3000 | 9000 |
| | 8 100 – க்கு மேல் 200 குதிரை திறன் வரை | | | | | 20000 |
| | 200 குதிரை வேகத்திற்கு மேல் கூடுதல் ஒவ்வொரு குதிரை திறனுக்கும் ரூ. 100 /- வீதம் வசூலிக்கப்படும் | | | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 11 | தொலைத் தொடர்பு வசதிக் மற்றும் இதர தகவல் தொடர்பு சாதனங்களாகவும் ஏற்கனவே நிலையில் அமைப்பட்ட மற்றும் அமைக்கப்படவுள்ள மத்திய மாநில அரசு அமைப்புகளுக்கு சொந்தமான கோபுரங்களுக்கும் உரிமக்கட்டணம் (தனியார் ஒயர்லெஸ் கோபுங்களுக்கும் உரிமக்கட்டணம் (தனியார் ஒயர்லெஸ் கோபுரங்கள் உட்பட்ட) | | ஒரு வருடம் ஒவ்வொரு வருடமும் அனுமதி காலத்திற்குள் உரிம கட்டணம் செலுத்தி அனுமதி புதுப்பித்துக் கொள்ள வேண்டும். | மனையின் தரைமட்டத்தில் இருந்து 10 மீ உயரம் வரை 15 மீ வரை 20 மீ வரை 20 மீ முதல் 1 மீட்டர் அதன் பாகம் | | மாமன்றத் தீர்மானம் எண். 68 நாள். 12.9.2011 ன்படி தொலைத்தொடர்பு கோபுரங்களை அபாயகரமான மற்றும் அருவருக்கத்தக்க தொழில் (Dangerous and offensive Trade) இனங்கள் பட்டியலில் சேர்த்து வருடாந்திர உரிமம் கட்டணமாக ரூ. 30000 நிர்ணயம் செய்து தீர்மானிக்கப்பட்டது. இக்கட்டணம் வசூல் செய்யததால் இதனை நீக்கம் செய்யலாம் |
| 12 | பாதுகாப்பு வைப்புத் தொகை குடியிருப்பு கட்டிடத்திற்கு அனுமதி வழங்கப்படும் போது 1 ச.மீட்டருக்கு 1 ச.மீட்டருக்கு ரூ. 75 –ம் வணிக உபயோக கட்டிடத்திற்கு 1 ச.மீட்டருக்கு ரூ. 150 –ம் (பள்ளி கல்லூரி, தொழிற்சாலை உட்பட) வசூலித்துக் கொண்டு அனுமதி உத்தரவி வழங்கலாம் கட்டுமான பணி முடிவடைந்த பிறகு அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின்படி கட்டிடம் கட்டினால் மேற்படி வைப்பு தொகை திருப்பி வழங்கலாம். மாறுபட்ட கட்டிடமாக இருந்தால் இத்தொகையை மாநகராட்சி எடுத்துக்கொள்ளாலாம். | | | | | |